விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 20 | ஞாயிற்றுக்கிழமை | (05.12.2004) | தொலைபேசி - 2223378, 2227344 | ஒலி 352

## ஐ.தே.கவும் – ஸ்ரீ.சு.கவும் இணைந்தால் புலிகள் பூச்சாண்டி காட்ட முடியாது

# அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவதே

# இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு!

## ஜனாதிபதி சந்திரிகா உரை



(கொழும்பு)

**அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும்.**

**இதற்கு பேச்சுவார்த்தையே பொருத்தமான வழியென்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

மொனராகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்படி இனப்பிரச்சினைக்கான தீர்வு முடிபை வெளியிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சமாதானத்திற்கான பார்வை மிகவும் கடினமானது. ஒரே இரவில் சமாதானத்தை ஒருபோதும் ஏற்படுத்திவிடமுடியாது.

நாட்டில் 80 சதவீதமான மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள். சொற்ப தொகையினரே அதற்கு எதிராக உள்ளார்கள். இருப்பினும் யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சரி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே எனது இலக்கு.

எத்தகைய நெருக்கடி நிலை அல்லது தடைகள் வந்தாலும் அதற்கு முகம் கொடுத்து நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படும்.

விடுதலைப் புலிகளுடன் பேச அரசாங்கம் தயாராகவிருக்கின்றது. தற்போது அமுலிலுள்ள போர்நிறுத்த உடன்படிக்கை என்பது யுத்தநிறுத்தமே தவிர போர் முடிந்துவிட்டது என்பது அல்ல. சில சந்தர்ப்பங்களில் அந்த உடன்படிக்கை கூட ஒரு தரப்பினரால் மீறப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த மக்கள் உட்பட தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவதே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும். இதற்கு பேச்சுவார்த்தைதான் பொருத்தமான வழி.

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்ரேலியாவில் மாவீரர் நாள் நிகழ்வு

அவுஸ்ரேலிய விக்டோரிய மாநிலத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று மெல்போன் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அவுஸ்ரேலிய பொறுப்பாளர் ஜெயக்குமார் பொதுச்சுடரை ஏற்றினார். அதனையடுத்து தமிழீழ விடுதலை விரும்பியான அருட்தந்தை ரிச்சர்ட் வூட்டன் அவுஸ்ரேலிய தேசியக் கொடியையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் விக்டோரிய மாநிலப் பொறுப்பாளர் யாதவன் தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தார்கள்.

தொடர்ந்து ஈகைச் சுடரேற்றல், மலர் மாலை அணிவித்தல், மாவீரர் குடும்பங்களின் மலர் வணக்கம், மக்களின் மலர் வணக்கம், அகவணக்கம் ஆகிய நிகழ்வு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வழிதவறிச் சென்றது ஹை - ஏஸ் வான்

## அதனால் 7 இளைஞர்கள் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடொன்றில் இருந்து தாயகம் திரும்பிய நண்பர் ஒருவரை ஏற்றிச் செல்வதற்காக பருத்தித்துறையில் இருந்து கொழும்பு புறப்பட்ட 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த இவ்விளைஞர்கள் 7 பேரும் கடந்த மாதம் 30 ஆம் திகதி வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஹை - ஏஸ் வாகனத்தில் கொழும்பிற்கு புறப்பட்டனர் என்று இவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் பின்னர் கிடைத்திருக்கவில்லை.

இந்நிலையில் ஜரோப்பிய நாட்டில் இருந்து இலங்கை வந்த குறித்த இளைஞர் நண்பர்களைக் காணாது உறவினர்களுக்கு அறிவித்தமையைத் தொடர்ந்தே ஏழுபேரும் காணாமற்போன செய்தி தெரிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டு படைத்தளங்களை பலப்படுத்துமாறு உத்தரவு!

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் உள்ள சகல படைத்தளங்களையும் துரிதமாக பலப்படுத்துமாறு படைத் தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளது.

இவ் உத்தரவுக்கமைய படைத் தளங்கள், காவலரண்கள் என்பவற்றுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

முப்படையினரும் எந்த நேரமும் முழு உசார் நிலையில் இருக்கவேண்டும் என படைத் தலைமைப் பீடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குடாநாட்டின் கடற்கரையோரம் மற்றும் முன்னரங்க காவலரண் பகுதியான நாகர்கோவில், முகமாலை, கிளாலி ஆகியவற்றின் பாதுகாப்புக் குறித்து இராணுவ உயர் அதிகாரிகள் குழு ஆராய்ந்ததாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை நாம் ஒரு போதும் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதில்லை என்றும் விடுதலைப் புலிகள் வலிந்து தாக்கினாலேயே தாம் பதில் தாக்குதலில் ஈடுபடுவோம் என்றும் படைத் தரப்பினர் தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

(இ-43)

# பாதுகாப்பு ஒப்பந்தத்தை மக்கள் எதிர்க்கவேண்டும்

## புலம்பெயர்ந்த மக்களுக்கு அமெரிக்கத் தமிழர் கோரிக்கை

(வோசிங்டன்)

இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு எதிராக புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவிலுள்ள ஈழத் தமிழர்கள், புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து அமெரிக்காவில் உள்ள ஈழத்தமிழர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழ்மக்கள் எல்லா நாடுகளிலும் பாரிய அளவிலான ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்தி இலங்கையுடன் செய்துகொள்ள உத்தேசித்துள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தை நிறுத்தக்கோரி அந்தந்த நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களில் மகஜர்களைக் கையளித்து தமிழ்மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் இந்த விடயத்தில் உள்ள காத்திரத்தை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு சமாதானம் என்ற பெயரில் இலங்கை அரசு போடும் இரட்டை வேடத்தையும் தெரிந்துகொள்ளும். வெளிநாடுகளில் ஏற்பாடு செய்யும் இந்த பேரணிகளுக்கு அங்குள்ள இந்திய நிறுவனங்கள், கடைகள் அரசுசாரா அமைப்புக்கள் கழகங்கள் இந்தியா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சியில் வெள்ளத்தால் 100 குடும்பங்கள் இடம்பெயர்வு

வடமராட்சிப் பகுதியில் மழை வெள்ளம் காரணமாக நூறு குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்துள்ளன.

நேற்று முழு நாளும் இடைவிடாது தொடர்ந்து பெய்த கடும் மழையினால் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள குடியிருப்புக்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் மேற்படி குடும்பங்கள் இடம்பெயர நேரிட்டது.

கரவெட்டி இராஜ கிராமம், துன்னாலை சக்குச்சம்பாதி, ஆட்டுப்பட்டி, குடவத்தை ஆகிய பகுதிகளில் இருந்தே குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளன. மழை தொடர்ந்தும் பெய்யுமாயின் மேலும் பல குடும்பங்கள் இடம்பெயரும் அபாய நிலை ஏற்படும்.

இதேவேளை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள உயர் நிலங்களிலும் தாழ்நிலப் பகுதிகளிலும் நீர் நிரம்பியுள்ளது. நேற்றைய கடும் மழை காரணமாக வீதிகளிலும் ஆங்காங்கே வெள்ளம் தேங்கி நின்றதால் போக்குவரத்துகளில் இடையூறுகள் ஏற்பட்டன.

(த-101)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்று ஒரு தகவல்

## உயிர் வாழ்க்கை

ஒரு சமயம் வயதான ஒருவர் புத்தரிடம் வந்தாராம். கொஞ்சக காலம் அங்கேயே இருந்தார். உண்மையான துறவியாக ஆகிவிட்டாராம் அந்த சீடரும். ஒருநாள் புத்தர் அவரைக் கூப்பிட்டார். " துறவியாரே! உங்களுக்கு இப்போது வயது என்ன?'' என்று கேட்டார். அதற்கு அந்த சீடர்."ஐந்து வயதாகிறது'' என்றாராம்.

இதைக் கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம்." உங்களுக்கு 70 வயதிற்கு மேல் இருக்கும். ஆனால் ஐந்து வயதுதான் ஆகிறது என்று சொல்கிறீர்களே! என்ன காரணம்?'' என்று கேட்டார். அதற்கு அந்த சீடர் "ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால் உண்மையான ஞானம் எனக்குக் கிடைத்து ஐந்து வருடம் தான் ஆகிறது. அன்பு என் உள்ளத்தில் தோன்றியிருப்பதும இந்தக் காலத்தில் தான். இதற்கு முன்பு நான் வாழ்ந்த வாழ்க்கை ஒரு கனவு போல் தோன்றுகிறது. அந்த வாழ்க்கையினால் எந்தப் பலனுமிலையென தோன்றுகிறது. அதனால் தான் எனக்கு ஐந்து வயது என்று சொன்னேன்'' என்றாராம்.

அவர் ஐந்து வருடம் தான் இந்த உலகில் வாழ்ந்தாக நினைக்கிறார். அது உண்மைதான். இந்த உலகத்தில் உயிருடன் வாழ்வோரையெல்லாம் உயிர் வாழ்வோர் என்று ஒத்துக் கொள்ள முடிவதில்லை. வள்ளுவரே இதை ஒத்துக் கொள்ளவில்லை 'வசை ஒழிய வாழ்வாரேவாழ்வார் இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்'' என்கிறார் அவர். பழி உண்டாகாமல் வாழ வேண்டும். அதுதான் வாழ்க்கை.

அடுத்தவர்களுக்கு உதவி செய்து அதனால் வரும் புகழுடன வாழவேண்டும். அடுத்தவர்களுக்கு கெடுதல செய்து பழியோடு வாழ்வோரை வாழ்வோராக ஏற்க முடியாது. கெட்ட எண்ணங்கள் இல்லாமல் போக வேண்டும். அப்போது தான் தெளிவும், ஞானமும் வரும்.

ஒரு குரு இருந்தார். அவரைப் பார்த்து ஆசீர்வாதம் பெறலாம் என்று ஒரு சீடன் போனான். போய்க் கொண்டிருக்கும் போது... வழியில் ஒருயோகி "எங்கே போகிறாய்?'' என்று கேட்டார். இவர் விபரத்தைக் கூறினார். அந்தக் குருவின் மீது இந்த யோகிக்கு ஏற்கனவே பொறாமை. அதனால் அந்த சீடரைப் பார்த்து "உனது குருவுக்கு எதுவுமே தெரியாது அவர் ஒரு முட்டாள் நீ அவரை விடப்பெரிய முட்டாள். அதனால தான் அவரது சீடன் ஆனாய. உனது குருவால் ஏதாவது அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னை மாதிரி அவரால் நீர்மீது நடக்க முடியுமா? ஆகாயத்தில் பறக்க முடியுமா? இல்லை பூமியில் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவும் முடியாது? அப்படிப்பட்ட குருவிடம் போய் ஏன் நேரத்தை வீணாக்குகிறாய்? என்றாராம்.

இதற்கு அந்த சீடன்.' நான் ஏன் அவரைக் குருவாக ஏற்றுக் கொண்டு வணங்குகிறேன் என்றால் அவர் ஒரு போதும் கோபப்பட மாட்டார். மற்றவரைக் குறை கூறமாட்டார் இதைத்தான் அற்புதங்கள் யாவற்றிலும் பெரியதாக நான் எண்ணுகிறேன்'' என்றாராம். இதைக் கேட்டதும் அந்த யோகி தலை குனிந்து கொண்டு போனாராம்.

குளத்தின் மேலே நடக்கும் அதிசயத்தைவிட கோபப்படாமல் நடக்கும் அதிசயம் தான் பெரியது. அப்படி நடக்கப் பழக்கப் படுத்திக் கொள்வதுதான் மனிதனுக்கு நல்லது. கவலை எப்படி வருகின்றது என்பதற்கு ஒருவர் காரணம் சொன்னார். முதலில் கோபம வருமாம். அதைக் காட்டுவதற்கு எதிரில் யாரும இல்லாவிட்டால் அந்தக் கோபம் தன் மீதே திரும்புமாம். அந்த சூழலில் அதைக் கவலை என்கிறோம். கவலை வருவதற்கு இப்படியும் ஒரு வழி. மனதில் சாந்தியில்லாமல் வாழ்ந்தால் அது என்ன வாழ்க்கை?

சர்வாதிகாரி ஒருவன் மரணப்படுகையில் கிடந்தான். வைத்தியர்கள் கைவிட்டு விட்டனர். அவருக்கு வைத்தியம் செய்த பெரியவர் ஒருவர் வந்தார். " இறந்து கொண்டிருப்பவன் மனச் சாந்தியுடனாவது போய்ச் சேரட்டும்'' என்று நினைத்தார்."மேன்மைதாங்கிய அதிபரே! தங்கள் எதிரிகளை மன்னித்து விடுகிறீர்களா?'' என்று கேட்டார். சர்வாதிகாரி சாவகாசமாகப் பதில சொன்னாராம்" ஐயா! நான் மன்னிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால இப்போது எனக்கு விரோதிகள் யாருமில்லை ஏனென்றால் நான் அவர்களை ஏற்கனவே கொன்று விட்டேன்'' என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு சகலரும் ஆதரவு வழங்க வேண்டும்

## பண்டார வெல சுமணதேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை- இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு சகல மக்களும் ஆதரவு வழங்க வேண்டும் என ஜப்பானில் உள்ள ஸ்ரீ சுமணராம விகாரையின் பிரதம குருவான பண்டார வெல சுமணதேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு இலங்கை- இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது. இதனை சகல மக்களும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் விடுதலைப் புலிகளை அழிப்பதற்காகவே செய்யபடவுள்ளதாக சிலர் கூறுகின்றார்கள்.

என்னைப் பொறுத்தவரை அவர்களின் இந்தக் கூற்றுத் தவறானது என்றே கருதுகின்றேன். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந் ஒப்பந்தம் உதவியாக இருக்கலாம். ஆனால் தமிழ மக்களுககு எந்தவிதப் பாதிப்பையும இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தாது என்றார். (க-60)

## வடக்கு-கிழக்கில் ஆயிரம் கிராமங்களில்

# கிராமிய விவசாய அபிவிருத்தித் திட்டம்! 2005 முதல் நடைமுறைக்கு வருகிறது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களம், வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் நிதியுதவியின் மூலம் சுமார் ஆயிரம் கிராமங்களில் கிராமிய விவசாய அபிவிருத்தித் திட்டத்தை அமுல் படுத்தவுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

வடககு-கிழக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 8 மாவ்ட்டங்களிலும் மற்றும் மொனராகலை, புத்தளம், பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் வேளாண்மை மரக்கறி ஏனைய விவசாயப் பயிர்கள், பழச்செய்கை என்பவற்றில் செய்கை அபிவிருத்தி செய்யப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒவ்வொரு சமுதாய உதவிக் குழு நியமிக்கப்படும்.

இக்குழுவில் பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் அடங்குவர்.

இக்குழுவினர் கிராமங்களுக்கு விஜயம் செய்து அக்கிராமங்களின் தேவைகளை இனங் காண்பதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள திட்டமிடப்படும். (க-9)

# இராசிபலன்

**05.12.2004**
**கார்த்திகை 20, ஞாயிற்றுக்கிழமை**
**அட்டமி பிற்பகல் 3.00 மணிவரை**
**பூரம் பிற்பகல் 5.14 மணிவரை**
**இராகுகாலம் 4.47-6.17 மணிவரை**
**சுபநேரம் 9.17-10.47 மணிவரை**
**சித்தாமிர்தம்**
**விநாயகர் விரதம் 9 ஆம் நாள்**

**மேடம்** சிறு வியாதி, சொத்துப் பிணக்கு, மனச்சோர்வு, முயற்சி தாமதம்.

**இடபம்** உடல் நலக்குறைவு, மனப்பயம், போசனசுகக்குறைவு, காரிய தாமதம்.

**மிதுனம்** புதிய தகவல், பிரயாண நன்மை, தொழில் சிந்தை, சுபநிகழ்வு.

**கடகம்** அமைதிக்குறைவு, கடினவார்த்தை, முயற்சி தாமதம், மாதர் நட்பு.

**சிங்கம்** சயன சுகம், கலந்துரையாடல், விருந்துபசாரம், நல்லமுயற்சி.

**கன்னி** நண்பர்கள் விரோதம், தனவிரயம், அமைதிக்குறைவு, சுரவியாதி.

**துலாம்** சகோதரர் உதவி, நல்ல மனை வாசம், மேன்மை, கீர்த்தி.

**விருச்சிகம்** நிலைமாற்றம், நல்லசெய்தி, புதிய திட்டம், உறவினர் சந்திப்பு.

**தனுசு** வீண் பயம், பித்தரோகம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், பண விரயம்.

**மகரம்** வீண் தொல்லை, ஆரோக்கிய குறைவு, திடீர் நன்மை, முயற்சி தாமதம்.

**கும்பம்** குடும்ப மகிழ்ச்சி, கலந்துரையாடல், பெருமையடைதல், தெய்வசிந்தை.

**மீனம்** நோய் குணமடைதல், காரிய சித்தி, விருந்துபசாரம், நல்ல செய்தி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# உலகப் பொருளாதார மாநாடு அடுத்த வாரம் புதுடில்லியில்...

(கொழும்பு)

புதுடில்லியில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார மாநாட்டில் இலங்கையின சார்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான குழுவினர் பங்குபற்றவுள்ளனர்.

சிரேஸ்ட அரசாங்க அதிகாரிகளும் 20 பிரபல வர்த்தகப் பிரமுகர்களும் இந்தக் குழுவில் இடம பெறுகின்றனர்.

இதற்கிடையில் இந்த சர்வதேச மாநாட்டுக்கு முன்னோடியாக இந்தியப் பொருளாதார மனறத்தின் 20 ஆவது வருடாந்த மாநாடு நாளை ஆரம்பமாகவுள்ளது.

(க-60)

# சைவநெறி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தின் ஏறபாட்டில் சைவ நெறி விழா எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள விசாலாட்சி மண்டபத்தில் யாழ்.கல்வி வலய பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக தனியார் உல்லாசப் பிரயாண நிறுவன இயக்குநர் இராஜரட்ணம் விஜயகுமாரும் சிறப்பு விருந்தினராக தேவார இசைமணி கலாபூஷணம் தாவடியூர் இராசையா திருஞானசம்பந்தனும் கலந்து கொள்கின்றார்கள்.

தொடர்ந்து இவ்வாண்டு நடாத்தப்பட்ட சைவ நெறிப் போட்டி பரீட்சையில வெற்றி பெற்ற சுமார் 207 பாடசாலை மாணவாகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (க-5)

## மருதங்கேணியில்

# கால்நடை வைத்திய நிலையம் அமைத்துத்தருமாறு கோரிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணியில் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் ஒன்றை நிறுவித்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளான பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பகுதிகளில் தனித்தனியாக கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயம் இருக்கின்றது.

ஆனால் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கால்நடை வைத்தி அதிகாரி அலுவலகம் இல்லாது இருப்பதனால் இப்பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இப்பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்போரினது நலனைக் கருத்தில் கொண்டு இப்பகுதிக்கான கால்நடை வைத்திய நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ப-35)

# ஒட்டாவா, கால்ரன் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் நடாத்திய மாவீரர் தின நிகழ்வுகளின் படத் தொகுப்பு




# இருபத்தோராம் நூற்றாண்டின் சிறந்த விடுதலைப் போராட்டத் தலைவர் பிரபா!

## தமிழ் நாடு விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் பொன் திருமாவளவன் புகழாரம்

(கொழும்பு)

இருபத்தோராம் நூற்றாண்



டின் தியாக விடுதலைப் போராட்ட தலைவர்களில் தமிழீழத தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஒருவர் மட்டுமே தாய் மண்ணில் களத்தில் நின்று பகைவர்களை விரட்டியடிக்கக்கூடிய போராளியாக மண்ணைப் பாதுகாக்கின்றார் என தமிழ் நாட்டின் விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் பொன்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக் கிழமை பி:ப.3.30 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்ட பத்தில் நடைபெற்ற 'அறிவமுது' பதிப்பகத்தின் நான்கு நூல்கள் அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் விழாவில் பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், திருமதி தியாகம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.

பேரிகை இலக்கிய அமைப்பின் தலைவர் வே. வேளமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்சியில் வெளியீட்டுரையினை வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் பி.கருணாகரன் நிகழ்த்தினார்.

நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளை போராளி மலைமகள், போராளி கலைக்கோ, கிளிநொச்சி தமிழ்ச்சங்கச் செயலாளர் வே.பரமநாதப்பிள்ளை, முதுமை வேந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இங்கு கப்டன் வரதவனின் போருலா, ரஷ்ய நாவலான முல்லை மனிதனின் கதை, கோபூரின் மலர்கோலம் ஆகிய நூல்களுடன் பண்டிதன் நாள் குறிப்பேடும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

'போருலா' நூலினை போராளி தமிழ்க்கவி வெளியிட கட்டளைத் தளபதி கேணல் தீபன் பெற்றுக் கொண்டார். முல்லை மனிதன் கதையை ஊடக ஒருங்கிணைப்பு இணைப்பாளர் நரேஸ் வெளியிட கல்விக்கழக பொறுப்பாளர் வே.இளங்குமரனும் கோபூரின் மலர்கோலம் நூலினை நிதர்சன பொறுப்பாளர் சேரலாதன் வெளியிட நீதி நிர்வாகப் பொறுபபாளர் பரா பெற்றுக் கொண்டார். பண்டிதன் நாள் குறிப்பேடு- 2005 நூலை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வெளியிட தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் பெற்றுக் கொண்டார்.

இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய திருமாவளவன் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

ஈழவிடுதலையை ஆதரிப்பது தமிழர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். தமிழர்களுக்கு என்று ஒரு அரசு வேண்டும் அது தமிழீழத்தில் தான் மலர்ந்திருக்கிறது. போர் நடந்த இழப்புக்கள் ஏற்பட்ட பூமியாக, அநாதைகளாக, பாதிக்கப்பட்டவர்களாக யாவரையும் கைவிட்டு விடாமல் பேணிக்காக்கும் அமைப்புகளை தலைவா வே. பிரபாகரன் நிறுவி இருப்பதும் மகத்தான கட்டுமான பணியினை தொடங்கி இருப்பதும் வியப்பில் ஆழ்த்துகின்றது. இராணுவத்தினர் பதவி, பணத்திற்காக போராட விடுதலைப்புலிகள் இனத்தின் விடுதலைக்காக மண்ணை மீட்க வேண்டும் என்பதற்காக போரிடுகிறார்கள்.

தாயகத்தில் மண்ணை காப்பதில் பெண் புலிகளின் பங்குகண்டு பெருமையுறுகிறேன். பெண்கள் விடுதலை பெற்றிருப்பது இத் தமிழீழத்தில் மட்டும் தான். நள்ளிரவிலும் நிழலோடு நிழலாக மரத்தோடு மரமாக, கிளையோடு கிளையாக, பூச்சிகள், பாம்புகள் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது மண்ணை பாதுகாக்க வேண்டும் என்ற தியாக உணர்வோடு அவர்கள் உள்ளனர்.

விடுதலைப்புலிகள் மரபு வழி இராணுவமாக வளர்ச்சி கண்டு விட்டார்கள். ஸ்ரீலங்கா அரசு வரட்டுக் கௌரவத்தினால் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்க தயாராக இல்லை.

தமிழர்களுக்கென்று ஒரு தமிழீழ அரசு அமைய வேண்டும் என்பதில் விடுதலைச்சிறுத்தைகள் விருப்பம் கொண்டுள்ளனர் என்றார். (ற)

## நிவாரணப் பொருட்களை சிட்டையுடன் சரிபார்த்துப் பெற்றுக் கொள்க!

### யாழ்.மாவட்ட வி.நு.கூ.ச சமாசம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கக்கிளைகளூடாக விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருட்களின் அளவுகளை சிட்டையுடன் சரிபார்த்துப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச்சங்கக் கிளைகளூடாக விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருட்களில் நிறை வெட்டு உள்ளதாக வெளியான செய்தியை அடுத்தே யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது விடயம் குறித்து சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பாவனையாளர்கள் இவ் விடயததில் விழிப்புடன் இருக்க வேண்டும். பாவனையாளர்கள் சிட்டைப் படி பொருடகளைச் சரி பார்த்து பெற்றுக் கொள்ளவும்.

அவ்வாறு மேற்கொள்வதில் கிளை முகாமையாளா களால் ஏதும் அசௌகரியங்கள் ஏற்படின் உடனடியாக அப்பகுதி ப.நோ.கூ. சங்க தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அவ்வாறு தொடர்பு கொண்டும் அவர்கள் இதற்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதவிடத்து 222-2662,2186, 2324, 3759,2639 எனும் தொலைபேசி இலக்கங்களூடாகத் தொடர்பு கொள்ளுமிடத்து பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## சமூகமளிக்கத் தவறியோருக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் பேரை மேலும் ஆசிரிய சேவையில் உள்ளீர்கும் முகமாக கடந்த செவ்வாய்க் கிழமை திருகோணமலையில் வடக்கு கிழக்கு மாகாணக் கலவி அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு சமூகம் அளிக்கத தவறியோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக நேர்முகத் தேர்வுக்கு சமுகம் அளிக்கத்தவறியோர் எதிர்வரும் 16 ஆம் திகதிக்குள் யாதாயினும் ஓர் தினத்தில் நேர்முகத் தேர்வுக்கு சமுகம் அளிக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு தமிழர் ஆசிரிய சங்கச் செயலாளர் மகாசிவம் கேட்டுள்ளார். (ற-5)

## சந்தேக நபரை மூன்று நாட்கள் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்துவது மனித உரிமை மீறல்

(மட்டக்களப்பு)

குற்றவியல் சட்டக் கோவையில் திருத்தம் செய்து குற்றம் இழைத்தவராகச் சந்தேகிக்கப்படும் நபரை மூன்று நாட்கள் பொலிஸ் நிலையத்தில தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தும் சட்டத் திருத்தம் மனித உரிமைகளைப் பாதிக்க வழிவகுக்கும் என மட்டக்களப்பு காந்தி சேவா சங்கச் செயலாளர் கதிர்பாரதிதாசன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்தகாலங்களில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலம் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட நபர்கள் இருபத்திநான்கு மணித்தியாலயத்திற்குள் நீதிமன்றத்தில் நீதிபதியின் முன் நிறுத்தப்படாமல் இராணுவ முகாம்களிலும், தடுப்புமுகாமகளிலும், பொலிஸ் நிலையங்களிலும், தடுத்து வைக்கப்பட்டனர். வழக்குகள் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதைக்குட்படுததப்பட்டும், ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டதுடன் படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் அதிகமானோர் காணாமல் போயுமுள்ளனர். இதற்கு அக்கால கட்டத்தில் இருந்த சட்டங்களே காரணமாகும். தற்போது அச் சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது பொது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## அறிவுறுத்தல்

(துன்னாலை)

வீதிவிபத்துக்களை தடுப்பதற்கான விசேட அறிவித்தல்களை வடமராட்சி சிற்றூர்திச் சங்கத்தலைவர் சி.புலேந்திரன் விடுத்துள்ளார்.

அத்துடன் குறிப்பிட்ட இடங்களிற்கு குறித்த நேரத்தில் இலக்க சிற்றூர்திகள் செல்ல வேண்டியதன் அவசியம் பற்றியும், அந்நேர அளவீட்டில் ஏற்படும் மாற்றம் பற்றியும், அவர் விசேடமாக அறிவித்துள்ளார்.

மேலும் பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி ஆகிய தரிப்பிடங்களில் சிற்றூர்திகள் தரித்துச் செல்ல வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. (ப,108,9)

## யுத்தத்தில் ஊனமுற்ற இராணுவத்தினர் அரசியல்வாதிகள் மீது கடும் அதிருப்தி

(கொழும்பு)

யுத்தத்தினால் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் தங்களுக்குரிய ஓய்வூதியத்தை உடன் வழங்கவேண்டும்என்று மீண்டும் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துளளாாகள்.

இந்தக் கோரிக்கையை முன் வைத்து கடந்தவியாழக் கிழமை இராணுவத் தலைமையகத்திற்கு முன்பாகக் கூடிய யுத்தத்தில் ஊனமுற்ற இராணுவ வீரர்களின் சங்கப் பரதிநிதிகள் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸதலமான அலரிமாளிகைக்குச் சென்று இது பற்றிய மகஜரொன்றை கையளிக்க விருந்த போதிலும் பிரதமர் மகிந்தராஜ பக்ஷ அங்கு இல்லாத காரணத்தினால் அது சாத்தியப்பட வில்லை.

இராணுவ தலைமையகத்திலிருந்து அலரிமாளிகை வரை சக்கர நாற்காலிகளில் இந்தப் படை வீரர்கள் சென்றிருந்தார்கள.

பிரதமர் அங்கு இல்லாத நிலையில் தங்கள் மகஜரை பாராளு மனறத்தில் அவரைச் சந்தித்து கையளிக்க குறிப்பிட்ட சங்கப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளார்கள். இது தொடர்பாக சங்கத்தின் தலைவா அசோகா தயாரத்ன கருத்து வெளியிடுகையில, பாராளுமன்ற உறுப்பினாகள் 5 வருட சேவையின் பின்பு ஓய்வூதியம பெறத தகுதி பெறுகின்றாாகள்.ஆனால் நாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்து ஊனமுற்ற இராணுவ வீரர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு 12 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டும். இது தொடர்பாக சகல அரசாங்கங்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திய போதிலும் சாதகமான பதில் இது வரை கிடைக்கவிலலை.

அரசியலே யுத்தத்தை தீர்மானித்தது. அரசியலுக்காகவே யுத்தம் செய்யநேரிட்டது. யுத்தம அரசியல் நோக்கததைக் கொண்டது. அரசியல்வாதிகளின் சுயலாப போக்குகளினால் தான் இந்த நாடு யுத்தபூமியாகியது. எந்த அரசியல் கட்சியை எடுத்தாலும் நாட்டின் பொருளாதாரத்தை விட யுத்தத்தை முன் வைத்தே அன்றும் சரி இன்றும் சரி அரசியல் வேலைத திட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

கடந்த 20 வருடகால யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் பொலிசாரும் கொல்லப்பட்டிருக்கின்றாாகள். இவர்கள் பணக்காரர்கள் அல்ல, ஏழைகள். ஊனமுற்றவாகளைப் பற்றி எவரும் இப்போது நினைத்துப் பாாப்பதில்லை.

தற் போது யுத்த நிறுத்த சூழல் நிலவுவது மகிழ்ச்சிக்குரியது. இதன் காரணமாக கடந்த இரண்டு வருட காலங்களாக படைவீரர்கள் உயிரிழக்கவில்லை. அவர்களின் மனைவிமார்கள் விதவைகளாக வில்லை. ஏழைப் பெற்றோர்கள் பிள்ளைகளை இழக்கவில்லை. இராணுவ வீராகள் ஊனமடையவில்லை என்றார். (ற)

விவாத அரங்கு -7

விடயம்

தனியார் கல்வி நிறுவனங்கள்
மாணவர்களின் கல்வியை
சீரபடுத்துகின்றனவா?
சீரழிக்கின்றனவா?
உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி
வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## நீதிபதி கொலைச் சூத்திரதாரி களுத்துறை சிறைக்கு மாற்றம்

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலைச் சூத்திரதாரியான போதைவஸ்து வர்த்தகர் மொகமட் நியாஸ் நவ்பரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை களுத்துறைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசேலா விஜயவர்தனா உத்தரவிட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர்கடந்த வியாழனன்று பலதத பாதுகாப்பின் மத்தியில் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தனக்கு எவ்வித தொடாபும் இல்லை. திட்டமிட்டுத் தன்னை இந்த கொலையுடன் தொடர்பு படுத்தியிருப்பதாக சந்தேக நபர்நீதிமன்றத்தில் தெரிவித்தார். இவர் சார்பில் எந்வொரு சட் டத்தரணியும் ஆஜராகவில்லை. குற்றப் புலனாய் வுத் துறையினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, ஏனைய சந்தேகநபர்களுடன் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இவரை வைக்காமல் களுத்துறைச் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

இதேவேளை, மேல் மாகாண சபை உறுப்பினர் நாமல் குணவர்தனாவின் கொலையுடனும் இவருக்கு தொடர்பு இருப்பதாக குற்றப் புலனாய்வுத் துறையினர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். (ற)

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை - 2004

## கணிதம் பகுதி II

நேரம்: 3மணி

ஆக்கம்: கு.விக்கினேஸ்வரன்,
யா/அச்சுவேலி சரஸ்வதி
வித்தியாலயம்.


**முதலாம் வினா உட்பட வேறு 7 வினாக்களுக்குமாக மொத்தம் எட்டு வினாக்களுக்கு விடையளிக்குக.**

(1)a) காரணி அறிவு கொண்டு பெறுமானம் காண்க.

i. $\sqrt{65 \times 55 + 25}$ ii. ab+a+b+1


iii. $\sqrt{2} = 1.41$ எனின் $\frac{3}{\sqrt{2}}$ இன் பெறுமானத்தினைக் காண்க.

b) i.





0 வட்ட மையம். இவ் உருவின் சுற்றளவினைக் காண்க.

ii.




உருவில் காட்டப்பட்ட செவ்வகத்தின் கால்வட்ட பகுதிகள் நீக்கப்பட்டால் எஞ்சிய நிழல்படுத்திய துண்டின் பரப்பளவு யாது?

iii.




உரு ABCDE யில் $\hat{CDE} = 90^0$ எனின் ஐங்கோணி ABCDEயின் பரப்பளவினைக் காண்க.

c) i. $\log_x 8 = 1\frac{1}{2}$ எனின் x ஐக் காண்க.

ii. தீர்க்குக. $\log x - 3\log 3 = \log^5 - \log^{45}$

iii. $3^x = 1$ எனின் X ஐக் காண்க.

d) 12% வருட கூட்டுவட்டி வழங்கும் வங்கியில் ஒருவர் ரூபா 8000 ஐ வைப்பில் இடுகிறார். 2 வருடங்களின் பின் வட்டி வீதத்தை 10% ஆக வங்கி குறைக்கின்றது.

i. இரண்டு வருடங்களில் அவரின் கணக்கில் உள்ள தொகை எவ்வளவு?

ii. 3ம் வருட முடிவில் அவருக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு?

e) n(S)=20, n(A)=5, n(B)=7, n(AUB) = 10 எனின்

i. A,B என்பன தம்முள் புறநீக்கமான நிகழ்ச்சியா?


ii. P(AnB) ஐக் காண்க.

iii. A,B என்பன சார நிகழ்ச்சியாயின் P(B) P(A) ஐக் காண்க.

f) i. $\frac{1}{x} - \frac{7}{y} = 12$


$\frac{2}{x} + \frac{5}{y} = 5$ எனின் X,Y ஐக் காண்க.

ii.




வெற்றிடத்தினை நிரப்பி xஐக் காண்க.

(2) a)




எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் A-நுண்ணறிவு, B-மொழித் திறன், C- பொதுஅறிவு ஆகிய மூன்று பாடங்களுக்கும் குறித்த எண்ணிக்கை யானோர் தோற்றுகின்றனர். அவர்களின் சித்தி வீதத்தினை வென் உரு காட்டுகிறது.

i. பொது அறிவில் 70 பேர் சித்திபெற்றால் பொதுஅறிவு மட்டும் சித்திபெற்றோர் தொகை எவ்வளவு?

ii. n(CUB)' = ஐக் காண்க.

iii. பரீட்சைக்குத் தோற்றியோர் 90பேர் எனின், நுண்ணறிவும் மொழித் திறனும் மட்டும் சித்திபெற்றவராக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

b) ஒருவன் இரண்டு கயுவிதையினையும் ஒரு இலாவுள் விதையினையும் நடுகிறான். கயு விதை முறைப்பதற்கான நிகழ்தகவு $\frac{2}{3}$ இலாவுள் விதை முளைப்பதற்கான நிகழ்தகவு $\frac{3}{5}$ எனின்

i. இதற்கான மரவுருபடத்தினை வரைக.

ii. மூன்று விதைகளும் முளைப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

iii. யாதேனும் இரு விதைகள் மட்டும் முளைப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

(3) சார்பு $y = -2x^2 + x + 1$ இன் வரைபினை வரைவதற்கு பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை தரப்பட்டுள்ளது.

| X | -3 | -2 | -1 | 0 | ½ | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Y | -20 | --- | -2 | --- | --- | 0 | -5 | -14 |

i. அட்டவணையைப் பூரணப்படுத்துக?

ii. சமச்சீர் அச்சின் சமன்பாட்டைத் தருக?

iii. $-2x^2 + x + 1 = 0$ இன் மூலகங்களைக் காண்க?

iv. சார்பின் உயர்வுப் பெறுமானம் யாது?

v. x இன் $-2 < x < 2$ ஆகிய வீச்சிற்கு இசைவாக Yயின் வீச்சினைக் காண்க.

vi. சமன்பாடு $-2x^2 + x + 1 = 2x - \frac{1}{2}$ இன் மூலகங்களை வரைபினைப் பயன்படுத்திக் காண்க.

(4) நேர் விளிம்பு, கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி AB=5.5cm, $\hat{DAB} = 60^0$, AD=4.8cm AB//DC, DC=8cm ஆக உள்ள சரிவகம் ABCDயை அமைக்குக.


i. இதற்கான பரும்படிப்படத்தினை வரைக.

ii. $\hat{DCB}$ ஐ அளந்து எழுதுக.

iii. B,C ஆகிய உச்சிகளில் இருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கினைக் காண்க.

iv. மேலே குறிப்பிட்ட ஒழுக்கு மீது மையத்தினைக் கொண்டதும் பக்கம் DCயைப் புள்ளி Cயிலே தொடுவதுமான வட்டத்தினை வரைந்து அதன் ஆரையை எழுதுக.

(5)




இரும்புத் துண்டு ஒன்றினை உரு காட்டுகிறது. இவ் உருவில் அரைவட்ட உருளை வடிவான பள்ளம் காணப்படுகிறது. அதன் விட்டம் 7cm.

i. அரைவட்ட உருளைப் பள்ளத்தின் மேற்பரப்பளவு எத்தனை $Cm^2$?

ii. இரும்புத்துண்டின் மொத்த மேற்பரப்பினைக் காண்க.

iii. உருவின் கனவளவினைக் காண்க.

iv. மேலே உள்ள உருவின் கனவளவிற்குச் சமமான தங்கத்தினைப் பயன்படுத்தி 0.07cm விட்ட முறை எத்தனை குண்டலங்கள் செய்யலாம்.

(6) மரதன் ஓட்ட நிகழ்வில் பங்குபற்றியோர் குறிப்பிட்ட தூரத்தினை ஓடி முடித்த தகவலை அட்டவணை காட்டுகிறது.

| எடுத்த நேரம் | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 |
|---|---|---|---|---|---|---|
| ஓடிமுடித்தோர் தொகை | 3 | 4 | 7 | 10 | 6 | 5 |

i. இப்பரம்பலின் ஆகார வகுப்பு யாது?


ii. இடைய வகுப்பு யாது?

iii. ஆகார வகுப்பினை உத்தேச இடையாகக் கொண்டு உண்மை இடையினைக் காண்க.

iv. இப்பரம்பலுக்கான வலையுரு வரையத்தினை வரைந்து ஆகாரத்தினைக் காண்க.

v. அரை மணித்தியாலயத்திற்கு குறைவான நேரத்தில் ஓடி முடித்தோரின் நிகழ்தகவு 1/5 என ஒருவர் கூறுகின்றார். இக் கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தருக.

(7)




உருவில் TA வட்டத்தின் தொடலி AC விட்டம், O வட்டமையம், TBC வட்டத்தின் வெட்டி

i. $\hat{TAB}$, $\hat{ABT}$ ஐக் காண்க.

ii. $\hat{TAB}$ இற்கு சமனான கோணத்தினை தருக.

(..8பக்கம் பார்க்கவும்)



கரகாட்டக்காரி

கண்ணன்-விலாசினி

## லிட்டில் ஸ்டார் மீது காமெடி நடிகர் கோபம்

**கா**மெடி கவுண்டர், லிட்டில் ஸ்டார் மீது கோபத்தில் உள்ளார். காமதேவன் படத்தில் இவர் நடித்த பல காட்சிகளை வெட்டிவிட்டார்களாம்.

என்னை அவராத்தான் நடிக்க அழைச்சார். என் காமெடியை சிரிச்சு ரசித்தார். எல்லாக் காட்சியையும் அப்படியே வைப்பேன் என்றார். படம் ரிலீஸ் ஆனப்ப பார்த்தா பாதிக்குமேல காணோம் என்று சந்திப்பவர்களிடம் புலம்பி நடிகரை வசைபடுகிறாராம் பெல்.

---

**வ**யதான டைரக்டருடன் காதல் கிசுகிசுவில் சிக்கிய ராம நடிகையை வீழ்த்த அவர் சகோதரி களத்தில் குதித்துள்ளார். படக் கம்பெனிகள் பட்டியலை சேகரித்து போட்டோக்களை அனுப்பி வாய்ப்புக்கு வலை வீசுகிறாராம்.

---

'மும்பை எக்ஸ்பிரஸ்' படத்தில் கமலின் அக்காவாக நடிக்கிறார் கோவைசரளா.

---


## 53 லட்சத்தை வேண்டாம் என மறுத்த சிம்பு!

'**ம**ன்மதன்' முடிந்த கையோட சிங்கப்பூர், லண்டன்... என வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் போயிருக்கிறார் சம்பு! மன்மதன் சம்பள மிகுதிப் பணம் 53 லட்சத்தை வேணடாம் எனச் சொல்லி தயாரிப்பாளர் கிருஷ்ணகாந்ததை அசரவும் வைத்தாராம் சிம்பு!

.·.பாரீன் டூர் முடிநது திரும்பியதும் 'தொட்டி ஜெயா' படத்தில் பிஸியாகிறார்!

---

## மீண்டும் பாடுகிறார் தனுஷ்



'**பு**துக்கோட்டையிலிருந்து சரவணன்' படத்தில் 'நாட்டுச் சரக்கு...' என்ற பாடலை முதன்முதலாகப் பாடினார் தனுஷ். அதனைத் தொடர்ந்து ரோஜா கம்பைன்ஸ் தயாரிப்பில் தனுஷ் முதன் முறையாக நடிக்கும் படம் 'தேவதையைக் கண்டேன்' இந்தப் படத்தை ஜி.பூபதி பாண்டியன் இயக்குகிறார். வித்தியாசமான காதல் கதையாக இப் படம் உருவாகிறது.

ரீ விற்கும் இளைஞனாக நடித்துள்ள தனுஷ் இப்படத்தில் ஏழு ஜுன்ஸ் ஒரு செருப்பு மட்டுமே பயன் படுத்தியுள்ளார்.

ஆறு பாடலகளை இப்படத்துக்காக இசையமைத்துக் கொடுத்துள்ளார் தேவா. நடிகராக மட்டுமின்றி இந்தப்படத்தில் பாடகராகவும் பரிமளிக்கிறார் தனுஷ்.

'துண்டக்காணோம் துணியக்காணோம்..' என்ற பாடலை அனுராதா ஸ்ரீராமுடன் இணைந்து சொந்தக்குரலில் பாடியுள்ளார் தனுஷ். முத்தாஜும் சினாதானா பாடல் புகழ் ரகசியாவும் சேர்ந்து ஒரு பாட்டுக்கு நடனமாடியுள்ளனர்.

'விளக்கு ஒண்ணு திரியப் பாக்குது...' பாடல் காட்சியில் 'நினைத்தாலே இனிக்கும்' கமல், 'முரட்டுக்காளை' ரஜினி, நரிக்குறவர் எனப் பல வேடங்களில் நடித்துள்ளார் தனுஷ்.

கருணாஸ், கறுப்பு சுப்பிரமணி என்ற ஆட்டோ டிரைவர் வேடத்தில் வருகிறார். ஸ்ரீதேவியை அவர் ஒருதலையாய் காதலிக்க அதனால் அவளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தியேட்டரை அதிரவைக்கும்.

சத்யராஜின் உறவினரான சத்யன் காமெடி வேடத்தில் நடித்துள்ளார். பெண் பாரகப்போகும் வழியில் எதிரே ஸ்ரீதேவியைப பார்த்ததும் அவர் மீது சத்யனுக்குக் காதல் வர கலகலப்பு.

வேலம் சி.மனோகர், திரைவண்ணன் என இரண்டு புதிய பாடலாசிரியர்கள் அறிமுகமாகிறார்கள்.

'அழகே பிரம்மனிடம் மனு கொடுக்க ஒரு தேவதை எனைப் பார்க்கிறாள்...' என்ற தனுஷ் ஸ்ரீதேவியின் இரண்டு பாடல காட்சிகள் இலங்கையில் படமாக்கப்பட்டுள்ளது.

---

## மூன்று வேடங்களில் அஜித்



ஷ ஜி □ படத்தைத் தொடர்ந்து நிக் ஆடஸ சார்பில் எஸ்.எஸ்.சக் கரவர்ததி பிரமாண்டமாகத் தயாரிக் கும் படம் 'காட்.·.பாதர்' இதில் வய தான ஒரு வேடத்திலும் இரண்டு இளைஞன் வேடங்களிலும் அஜித் மாறு பட்ட மூன்றுவேடங்களில் நடிக்கிறார். கதாநாயகியாக 'என்.கும ரன் சன் ஆ.·.ப் மகாலட்சுமி' புகழ் அசன் நடிக்கிறார். இன்னொரு கதாநாயகி தேர்வும், முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கும் முன்னணி நடிகர் - நடிகையர் தேர்வும் தீவிரமாக நடந்துவருகிறது.

படத்தின் திரைக்கதை, வசனம் எழுதி கே.எஸ்.ரவிகுமார் இயக்குகிறார். நிக் ஆட்ஸ் தயாரிப்பில் அஜித் இரு வேடங்களில் நடித்து வெற்றிபெற்ற 'வில்லன' படத்திற்குப் பிறகு கே.எஸ். ரவிகுமார் - அஜித் மறுபடியும் இணைந்து பணிபுரியும் படம் 'காட என்பது குறிப்பிடத்தக்



'அம்மா அப்பா செல்லம்'

பாலா - சாயாசிங்

## சேரன் படத்தில் மீரா ஜாஸ்மின்



**எ**ன் வாழ்க்கையில் எதிர் பாராமல் நிறைய நடந்து போச்சு. படிச்சிட்டு இருந்த என்னை டைரக்டர் லோகிததாஸ் சினிமாவுக்கு அழைத்து வந்தார். அவரையும் என்னையும் பற்றி தப்பாப் பேசி அழ வைச்சிட்டாங்க. இப்பதான் கொஞ்சம் கொஞ்சமா சராசரி வாழ்க்கைக்கு திரும்பிட்டு இருக்கேன்.

சேரன் சார் என்கிட்ட ஒரு கதை சொல்லியிருக்கார். அவரோட ஒரு படம் நடிக்கிறேன். ஆட்டோ கிரா.·.ப் நல்ல படம். அதில் வந்த ஸ்கூல் பெண் கரக்டர் அருமையாக இருந்தது. அந்த மாதிரி கரக்டர்களில் நடிக்க ஆசைப்படுறேன் என்றா மீரா ஜாஸ்மின்.

## நெற




கப்பட்டு
தனியெ
சாமியா
என்ற
பயணிக்
உ
ருக்குக்
வழிப்பு
கலை.
யலில
லிடம். சிறுவயது அய்யனாருக்கு, 'இ
துடிப்பும், வேட்கையும் கொழுந்துவிட்டு

இந்நேரத்தில் அவனது மாமாவை,
விட, பொலிஸிடம் உண்மையைச் சொ
யாளம் காட்டுகிறார் அய்யனார். இது, இ
எழுகிறது. அதற்கடுத்து, கிராமத்தை மீ
கிறார் அய்யனார். மாமன மகளோடு, காத
கிறது. உழைப்பின் அருமையை ஊ
மெல்ல மாற்றுகிறார் நாயகன். கிராமத்
ளுக்காக, மாவட்ட நிர்வாகத்தோடு

எல்லாம் நல்லபடியாகப் போய்
மாறாத பகையுணர்வோடு சிறையிலிருந்
மகன். மாவட்ட நிர்வாகமும் ஏமாற்றிவிட
கூரத்தால் மாவட்ட வருவாய் அலுவல
அய்யனார். பொலிஸாரிடமும் பகை

மாவட்ட நிர்வாகம், பொலிஸ், ம
தரப்பு எதிரிகளோடு போராடுகிறார். அவ
மகனும், எதிரியைத் திருத்த அய்யன



இறுதியில் எல்லாச் சூழ்நிசிகளை
யாக உயர்கிறார். தியாகம், உருக்கம்,
பன்முகம் காட்டும் அய்யனாராக விஜய
கதாபாத்திரத்தை நேர்த்தியாகக் கைய
கேற்ப முகத்தை மாற்றிக்கொள்வதில சி
கேற்ப, அவருக்கேயான காட்சிகள்....

குறிப்பாக அடிதடிக்கு கிளம்பும்
சாந்தமாக்குவது, உயிரைக்கேட்கும் மா
கொள்' என்று சந்தோஷத்தோடு கூறு
காட்சிகள் கதாபாத்திரத்திற்கு பிளஸ்.
பர பரப்பும் ஏற்றும் காட்சிகளில் விஜய
ணிக்கு வெற்றி முகம்.

அய்யனாராக விஜயகாந்த், முறைப்
மகனாக புதுமுகம் சமபத, வருவாய் அலு
என்று எந்தப் பாத்திரமும் அதற்கான
செல்வது நம்பிக்கை தருகிறது. இந்தப்
சினிமாவுக்கு நல்லதொரு வில்லன்

அதிலும் எதிரிகளுக்கு கருணை கா
மிகக் குறைந்த நாளில் மிக நிறைவான
இயக்குநர் சமுத்திரக்கனி. இளம் இயககுந
வுக்கு படம் முழுக்க அவரது உழை

மதுரை மண்ணின் மணம் பரப்பும் க
யிருப்பவர் பாலசுப்பிரமணி. நீண்ட
கார்த்திக்ராஜா இசையில் கிராமியமும்,

நெகிழ்வான திரைக்கதையை சற்
ராக்கி ராஜேசின் சண்டைப் பயிற்சி, எ
இன்னொரு உழைப்பாளர் பட்டம் ஒளிப்
தரலாம். பல காட்சிகளுக்காக பிரத்தியே
பது பாராட்ட வைக்கிறது.


ஜி.ஜே.நிறுவனத் தயாரிப்பில் விஜ
லோருமே இளமைப் பட்டாளம். இருந்த
தரப்பட்டிருக்கிறது. அனைத்துத் தரப்
பார்த்துவிட்டு நெறஞ்ச மனசோடு வெ

நெறஞ்ச மனசு - ம

## ..நிறைஞ்ச மனசு

### திரை விமர்சனம்

ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்
கப்பட்டுக் கிடக்கும் கிராமத்தை
தனியொருவனாக மீட்டெடுத்து,
சாமியாக உயர்கிறார் நாயகன்
என்ற தெளிவான நேர்க்கோட்டில்
பயணிக்கும் திரைக்கதை.
ஊரின் பெரும்பாலானோ
ருக்குக்..கொலைத்தொழிலும்,
வழிப்பறி..ம், களவுமே கை வந்த
கலை. பொலிஸின் கறுப்புப் பட்டி
யலில அந்தக் கிராமத்திற்கே முத
..கு, 'இதை மாற்றவேண்டும்' என்ற
..ந்துவிட்டு எரிகிறது.
..மாமாவை, மகனே கொலை செய்து
..பச் சொல்லி குற்றவாளியை அடை
.. இது, இருதரப்புப் பகை உணர்வாக
..த்தை மீட்கும் முயற்சியில் இறங்கு
..ாடு, காதலும் மற்றொரு புறம வளர்
..யை ஊருக்கு உணர்த்தி மெல்ல
.. கிராமத்தின் அடிப்படை வசதிக
..த்தோடு போராடுகிறார்.
..ப் போய்க்கொண்டிருக்கும்போது,
..யிலிருந்து வெளிவருகிறார் மாமன்
..மாற்றிவிட, ஆவேச முகத்தோடு, நங்
.. அலுவலை..் கொலை செய்கிறார்
.. பகை ஏறபடுகிறது.
..லிஸ், மாமன் மகன் என்று முத்
..ார். அவரைத் தீர்த்துக்கட்ட மாமன்
.. அய்யனாரும் போராடுகின்றனர்.



..சிகளை.. துடைத்தெறிந்து சாமி
..உருக்கம், காதல், மோதல் என்று
..க விஜயகாந்த் மிக அழுத்தமான
..க் கையாண்டிருக்கிறார். தேவைக்
..வதில சிலிர்கக வைக்கிறார். அதற்
..ட்சிகள்....
..கிளம்பும் ஊருக்கு சாப்பாடு போட்டு
..ட்கும் மாமன் மகனிடம் 'எடுத்துக்
..ாடு கூறுவது என்று நெகிழ்வான
.. பிளஸ். மனதில் பதைபதைப்பும்,
..ல் விஜயகாந்த் - இயக்குநர் கூட்ட

..், முறைப்பெண்ணாக சூசன், மாமன்
..வாய் அலுவலராக பிரமட நடராஜன்
..தற்கான இயல்பை விட்டு மாறாமல்
..து. இந்தப் படத்தின் மூலம் தமிழ்
..வில்லன் ..டைத்திருக்கிறார்.
..துணை காட்டும் விஜயகாந்த் புதுமை.
.. நிறைவான படத்தைத் தந்திருப்பவர்
.. இயககுநர் என்று தெரியாத அள
..து உழைப்பு வியாபித்திருக்கிறது.
..பரப்பும் கதையோடு, வசனமும் எழுதி
.. நீண்ட இடைவேளைக்குப் பிறகு
..மியமும், மெனமையும் தாலாட்டுகிறது.
..தயை சற்றும் பாதிக்காத வகையில்
..பயிற்சி, எல்லோருக்கும் இணையாக
..டம் ஒளிப்பதிவாளர் பிரசாத்துக்குத்
.. பிரத்தியேக 'ஷொட்'டுகள் எடுத்திருப்

..ப்பில் விஜயகாந்த்தைத் தவிர எல்
..ம். இருந்தபோதும் தேர்ந்த படைப்பு
..த் தரப்பையும் கவரும் படத்தைப்
..சாடு வெளியே வரமுடிகிறது.
..னசு - மனசு நிறையும்.



# சினிமாச் சிதறல்

## எதிர்பார்ப்பு



ரஜினிகாந்த் தற்போது நடித்துவரும் 'சந்திரமுகியில்' 'அண்ணாமலை', 'பாட்ஷா' போன்ற படங்களில் வந்த கெட் - அப்பில் வருகிறார்.

இந்த இளமையான தோற்றம் ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படத்தில் ரஜினி தனக்கேயுரித்தான ஸ்ரைல், காமெடி கலாட்டா, சண்டைக் காட்சி போன்றவற்றில் கலக்குகிறாராம்.

## விசித்திரமான மாதவன்



சீமான் இயக்கும் 'தம்பி' என்ற படத்தில் நடிக்கும் மாதவன், தனக்கு ஜோடியாக நடிக்கக் கூடிய கதாநாயகி, இதுவரை யாருடனும் இணைத்து கிசுகிசு வராதவராக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறாராம்.

சோனியா அகர்வால் பெயரைச் சொன்னால், அவா இயககுநர் செல்வராகவனுடன் கிசுகிசுக்கப்படுகிறாரே என்கிறாராம். ஜோதிகா பெயரைச் சொன்னால் அவர் சூர்யாவுடன் இணைத்து கிசுகிசுக்கப்படுகிறாரே என்கிறாராம். சினேகா பெயரைச்சொன்னால், அவர் ஸ்ரீகாந்துடன் இணைத்து கிசுகிசுக்கப்படுகிறாரே என்கிறாராம்.

இப்படி பல கதாநாயகிகளை வேண்டாம் வேண்டாம் என்று மாதவன் மறுத்துக்கொண்டிருப்பதாக அவரது விசித்திர குணத்தைப் பார்த்து பேசிக்கொள்கின்றனர்.

## சிம்பு இசை


சிம்புவிற்குத் தன் தந்தையைப் போலவே அஷ்டாவனி ஆகும் எண்ணம் வந்திருக்கிறது போலும்.

விரைவில் ஒரு படத்தைக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கப் போவதுடன் 'மன்மதன்' டைரக்டர் ஏ.ஜே.முருகன் இயக்கும் அடுத்தப் படத்திற்கு இசையமைக்கவும் ஒப்புக்கொண்டுள்ளாராம்.

## மொட்டை போடுகிறார் தனுஷ்

பாலுமகேந்திரா இயக்கும் 'அது ஒரு கானக்காலம்' என்ற படத்துக்காக முதன் முதலாக மொடடை போடுகிறார் தனுஷ். கடநத மாதம் முடிந்திருக்க வேண்டிய படப்பிடிப்பு, ரஜினி மகள் ஐஸ்வர்யாவுடன் காதல் திருமணம் முடிந்து புது மாப்பிள்ளை வரும்வரை நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. திருமணத்துக்கு முன்பே மொட்டை போட்டு நடிக்க தனுஷ் தயாராக இருந்தார்


ஆனால், மொட்டையுடன் மாப்பிள்ளை கோலத்தில் இருந்தால், அதைப் பார்க்க மனம் சகிக்காது என்று சொன்னாராம் பாலுமகேந்திரா.




## தொழிலதிபருடன் ரகசிய காதலா?

தமிழ்ப் படங்களைவிட தெலுங்குப் படங்களில் நடிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கும் த்ரிஷா, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரை ரகசியமாகக் காதலிப்பதாகத் தெலுங்குப் படவுலகைச் சேர்ந்தவர்கள் கிசுகிசுக்கின்றனர். இதுபற்றி த்ரிஷா கூறுகையில்,

என் அசுர வேக வளர்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் வேண்டாத வதந்திகள் பரப்புகிறார்கள் என்று புலம்புகிறார்.



'காதல்'
பரத் - சந்தியா

## நெப்போலியன் நடிக்கும் 'பச்சையப்பன்'

'ஐயா', 'வீரண்ணா' ஆகிய படங்களில் நடிக்கும் நெப்போலியன், அடுத்ததாக 'பச்சையப்பன்'என்ற புதுப்படத்தில் நடிக்கிறார்.

பச்சையப்பன் என்ற பெயருக்குக கீழே பட்டதாரியைப் போல விவசாயி என்று போடப்படுகிறது. இது மண்ணின் மணம் பரப்பும் ஒரு மாறுபட்ட கதையம்சம் கொண்ட படமாகும்.

நடிகர் 'அன்பு' பாலா ஹோட்டல் பிஸினஸில் இறங்கியுள்ளாராம்.

# சிங்கள ஊடகவியலாளர்களுக்கு திருமலை நிலவரம் குறித்து எழிலன் விளக்கமளிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனை நேற்றுமுன்தினம் தென்பகுதி சிங்கள ஊடகவியலாளர்களும், திருகோணமலையில் உள்ள சிங்கள ஊடகவியலாளர்களும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று முன்தினம் 10 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது எழிலன் கருத்துத் தெரிவிக்கையில்,

திருகோணமலையில் பல தமிழ் தெரிந்த, தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருந்தபோதிலும், அங்குள்ள முறைப்பாடுகள், சிங்கள மொழியிலேயே பதியப்படுகின்றன.

இதிலிருந்தே தமிழ் மக்களுக்கான உரிமைகள் எந்தளவு மறுக்கப்படுகின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோன்று படையினர் மத்தியில் மனநிலையில் மாற்றம் ஏற்படும் போதுதான், தமிழ் மக்களுக்கான தீர்வும், நியாயமும் கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளாகிய நாங்கள் படையினரைப் பலவழிகளிலும் கொன்றொழித்துள்ளோம். எங்களைக் கண்டு கோபப்படாத அவர்கள், எங்களால் ஏற்றப்படுகின்ற எமது அமைப்பின் கொடியினைக் கண்டு கோபப்படுவது எமக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தருகிறது எனவும் மேலும் கூறினார்.

திருமலை நிலைமைகள் பற்றிய பூரண விளக்கங்களை இங்கு பத்திரிகையாளர் பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

# பரு.வைத்தியசாலையினை தரம் உயர்த்த நடவடிக்கை

(மருதங்கேணி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துமாறு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வாவிடம் கோரியுள்ளார்.

இவ்வைத்தியசாலையை தரம் உயர்த்துவதுடன் இங்கு நிலவும் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையையும் போக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

சிவாஜிலிங்கம் எம்.பியின் கோரிக்கைக்குத் தகுந்த நடவடி க்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் உறுதியளித்துள்ளார். (ப-35)

## கோதுமைமாவுக்கு தவண்டை

யாழ்.குடாநாட்டில் கோதுமை மாவிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

குடாநாட்டிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட வர்த்தகர்கள் பலரும் கோதுமைமாவை பதுக்கிவைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சில கூடிய விலைக்கு கோதுமை மாவை தனியார் வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்து வருகின்றன.

இவ்விடயத்தில் கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனைகளும் அசமந்தப்போக்கையே கடைப்பிடித்து வருகின்றன. (ப-43)

# சுவிற்சர்லாந்து டாக்டர் தீயில் கருகி மரணம்

(கொழும்பு

தங்காலையிலுள்ள சீனிமோதர என்னுமிடத்தில், சுவிற்சர்லாந்திலிருந்து வந்தவரான முதிய டாக்டர் ஒருவர் தீயில் கருகி இறந்துள்ளார்.

இப்பகுதி மக்களுக்கு, குறிப்பாக சிறுவர்களுக்கு தொண்டாற்றி வந்த 76 வயது ஹான்ஸ் ஹாரிரோபி கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இவர் இப்பகுதியில் வசித்தவராவார்.

இவர் தனது வீடொன்றில் தனிமையாக வாழ்ந்து வந்தவர். இவருக்கு உதவியாக சாரதியொருவரும் பணிப்பெண்ணொருவரும் வசித்து வந்துள்ளனர்.

காலை 7.00 மணிவரை இவர் எழுந்திருக்காததனால் சந்தேகமடைந்த உதவியாளர் அறையினுள் சென்று பார்த்தபோது அரையும் குறையுமாக எரிந்த நிலையில் அவரது உடல் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க-6)

# பல்கலை ஊழியர்களுக்கு மனித உரிமைக் கருத்தரங்கு

(திருநெல்வேலி)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் அபிவிருத்திமையப் பணிப்பாளர் பேராசிரியர் வி.பரமேஸ்வரனின் ஏற்பாட்டில் யாழ்.பல்கல்லைக் கழக கல்விசாரா ஊழியர்களுக்கான மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 ம்ணிக்கு பல்கலை துணைவேந்தர் பேராசியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியர் என்.செல்வக்குமாரன், மூத்த விரிவுரையாளர் ம.தமிழ்மாறன் உட்பட பலர் கருத்துரைகளை வழங்கினர். (ப-43)

## நிதி உதவி

(மருதங்கேணி)

வல்வெட்டித்துறை சந்தியிலுள்ள நூல் நிலையத்தையும் பஸ்தரிப்பு நிலையத்தையும் அமைப்பதற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் 5 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். (ப-35)

# மருதங்கேணி பிரதேசத்திற்கான சனசமூக நிலையங்களின் சமாசம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களிற்கான சமாசம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் ஒருகட்டமாக எதிர்வரும் புதன்கிழமை வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து சனசமூக நிலையத் தலைவர்களிற்குமான கூட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

இக்கூட்டத்திலேயே முக்கிய முடிவுகள் பல எடுக்கப்பட்டு சமாச உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற உள்ளது. (ப-43)

# மாகாணசபை ஆளுநர்களுக்கு ஓய்வூதியம் வழங்கக்கூடாது என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

மாகாணசபை ஆளுநர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று ஜே.வி.பி. பாராளுமன்றக் குழு சபை முதல்வர் மைத்திரிபால சிறிசேனவைக் கோரவுள்ளது.

இதனை ஜே.வி.பி. செயலாளர் விமல் வீரவன்ச, அரச தரப்பு பிரதம கொரடா ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேயிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியங்களையே நிறுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில் ஆளுநர்களுக்கு ஓய்வூதியம் வழங் குவது பற்றி சிந்திக்க முடியாது.

ஆளுநர் பதவி ஒரு கௌரவப் பதவி எனவும் ஜே.வி.பி.பாராளுமன்றக் குழு தெரிவித்துள்ளது. (க.6)

## நிதி ஒதுக்கீடு

(திருநெல்வேலி)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் தனது பண்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியில் இருந்து செம்பியன்பற்று செண்பிலிப்நேரியார் சனசமூக நிலையத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அத்துடன் மாமுனை கலைமகள் விளையாட்டுக்கழகத்திற்கும் பண்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். (ப-43)

# இவர்கள் தாதியர்கள்தானா?

(திருநெல்வேலி)

யாழ்.பேதானா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற செல்லும் நோயாளர்களை அங்கு கடமைபுரியும் தாதிமார் கடுமையாக நடத்துவதாக நோயாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இங்கு கடமைபுரியும் வைத்தியர்கள் நோயாளர்களுடன் அன்பாகப் பழகுவதாகவும் வைத்திய ஆலோசனைகளைக் கூறுவதாகவும் குறிப்பிடும் நோயாளர்கள் தாதிமார்கள் தம்மை கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்து திட்டுவதாகவும் உரியமுறையில் தம்மை வைத்தியசாலையில் பராமரிப்பது இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் ஏற்கனவே நோய் வாய்ப்பட்டு சிகிச்சைக்காக வரும் தாம் இவர்களின் நடவடிக்கையால் உளவியல் ரீதியாக பலத்த பாதிப்பிற்கு உள்ளாவதாகவும் தெரிவித்தனர். (ப-43)

# படையினரின் கெடுபிடிகளால் பாடசாலை அபிவிருத்தி பாதிப்பு

(திருநெல்வேலி)

படையினரின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு படையினரின் உயர் பாதுகாப்பு வலைய நடைமுறை இடையூறாக இருந்துவருவதாக பாடசாலை நலன்விரும்பிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கப் பல தொண்டு நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் என்பன முன்வந்துள்ள போதும் படையினர் கட்டுப்பாடுகளை விதிப்பதால் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ( ப-43)

---

(..7 பக்கத் தொடர்ச்சி...)

iii. $\triangle TAB$, $\triangle TAC$ என்பன இயல்பு ஒத்தவை எனக் காட்டுக.

iv. இயல்பு ஒப்பினைப் பயன்படுத்தி $TA^2=TB.TC$ எனக் காட்டுக.

v. $4AO^2=TC^2-TB.TC$ என நிறுவுக.

(8) 1500cc மோட்டார் வண்டி ஒன்றிற்கான காப்பறுதி செய்யும்போது ஒவ்வொரு ரூபா 1000 திற்கும் வருடாந்த கட்டுப்பணம் ரூபா 30ஆகும். இழப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும்போது காப்புறுதி செய்த இழப்பீட்டு தொகையில் ஒவ்வொரு ரூபா 1000இற்கும் ரூபா 600ஐ தான் ஏற்றுக் கொள்வாராயின் தவணைப்பணம் 10% ஆல் குறைக்கப்படும். இவ் ஒப்பந்தப்படி தவணைக்கட்டணம் ரூபா 810 எனின்,

i. காப்புறுதி செய்த தொகை x எனக் கொண்டு செலுத்த வேண்டிய வருடாந்த தவணைப் பணத்தினைக் காண்க.

ii. ஒப்பந்தப்படி செலுத்திய வருடாந்த தவணைப் பணத்தினை xஇல் காண்க.

iii. காப்புறுதி செய்யப்பட்ட தொகையைக் காண்க.

(9) a. இரு எண்களின் கூட்டல் இடை 34, பெருக்கல் இடை 16 எனின் அவ் எண்களைக் காண்க.

b. பெருக்கல் விருத்தி ஒன்றில் 6ம் உறுப்பு $\frac{1}{2^5}$ இரண்டாம் உறுப்பு ½ எனின்

i. பொது வித்தியாசம் எவ்வளவு?

ii. 1ம் உறுப்பைக் காண்க?

iii. n உறுப்புகளின் கூட்டுத்தொகை $2-\frac{1}{2^{n-1}}$ எனக் காட்டுக.

(10) a. அதிபர் அலுவலகத்தில் இருந்து (0) அதிபர், விஞ்ஞான ஆய்வு கூடத்தினையும் (L) தரம் 11 வகுப்பறையினையும் அவதானிக்கிறார். (E) அலுவலகத்தில் இருந்து அவற்றின் திசைகோளினை அட்டவணை காட்டுகிறது.

| இடம் | தூரம் | திசைகோள் |
|---|---|---|
| விஞ்ஞான ஆய்வுகூடம் | 25m | $055^0$ |
| தரம் 11 வகுப்பறை | 37.5m | $325^0$ |

i. மேற்படி தரவுகளை 5m⟶1cm ஐ வகைக்குறிக்கும் படி அளவிடப் படத்தினை வரைக.

ii. விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கும் தரம் 11 வகுப்பறைக்கும் இடையிலான தூரத்தினைக் காண்க.

b.




A,B,C ஆகிய நகரங்களின் அமைவினை படம் காட்டுகின்றது.

i. ABயிற்கிடையே ஆன தூரத்தினைக் காண்க.

ii. BC இணை இணைக்கும் நெடுஞ் சாலை Aயிலிருந்து போட ஆகக் குறைந்த தூரம் எத்தனை m ஆகும்?

# சமாதானம் வெற்றி பெறுவதற்கு இந்தியாவை முதன்மைப்படுத்துங்கள்!

## ஐ. தே. க. அமைப்பாளர் சமரசிங்க அரசுக்கு ஆலோசனை

(கொழும்பு)

**இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல இந்தியாவை ஒரு முக்கியமான நாடாகக் கருதிச் செயற்படவேண்டும்.**

**இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளர் மகிந்த சமரசிங்க அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.**

வரவு- செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் போது இந்தியாவைப் புறம்தள்ளாது அதனை முதன்மையான சமாதானப் பங்காளியாகக் கருதிச் செயற்படவேண்டும். அப்போதுதான் சமாதான முயற்சி முழுமையான வெற்றியடைய முடியும்.

சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வே அரசைப் பற்றிய அரசின் நிலைப்பாடு என்ன என்பதனை அரசாங்கம் முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

நோர்வே அரசின் நடவடிக்கைகள் குறித்துத் தெளிவற்ற ஒரு நிலைமை தோன்றியுள்ளது.

இதனை நீக்கும் வகையில் அரசாங்கம் நோர்வே பற்றிய தெளிவான விளக்கத்தை சபையில் தெரிவிக்க வேண்டும்.

சமாதானத்தை அடைவதில் பல இடையூறுகள் காணப்படுவதால் அதனைப் போக்கும் வகையில் அரசாங்கம் முதலில் தம்மைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் சமரசிங்க மேலும் தெரிவித்தார். (இ-8)

## இந்தியா தமிழ் மக்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காது!

### பாராளுமன்றில் சம்பந்தன் நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.தடையாக இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாறறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில்,

ஜே.வி.பியின் சமதானத்துக்கு எதிரான நிலைப்பாடு குறித்து சர்வதேச சமூகத்துக்குத் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடு தொடர்ந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதில் மேலும் கால தாமதம் ஏற்படும்.

தமிழ் மக்களின் இன்னல்களைத் தீர்ப்பதற்கு இடைக்கால நிர்வாகசபை அவசியம். தமிழ் மக்களுக்கு எதிராக இந்தியா எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது என்று தான் நம்புவதாகவும் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறிய முஸ்லிம் மக்கள் மீளவும தமது சொந்த இடங்களில் குடியமர எந்தவொரு தடையும் இல்லை.

குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் குறித்து தாம் மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்தார். (இ-8)

## அரசியற் தலைவர்களையும் சுங்கச் சோதனை செய்க

### ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறும் போதும், நாடு திரும்பும் போதும் வழமையான சுங்க பரிசோதனைக்கு அவர்களை உட்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிதியமைச்சிற்கு உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பிட்ட அரசியல் பிரமுகர்கள் சிலர் கடத்தல் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பதாக அண்மையில் வெளியான தகவல்களையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பயணிகளை சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் பிரிவு ஊடாகவே இவர்களும் இனிமேல் செல்ல வேண்டும் எனவும்,

இந்த விடயத்தில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமானால் நிதியமைச்சு ஊடாகத் தனது கவனத்திற்கு உடன் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-4)

## எயிட்ஸைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ.குடாநாடெங்கும் எயிட்ஸ் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், யாழ். மாவட்ட தமிழீழ சுகாதாரப் பிரிவினரால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இக் கருத்தரங்குகள் அரச திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற இடங்களில் நடாத்தப்படுகின்றன.

இந்த வரிசையில் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான கருத்தரங்குகள் நாளை நடைபெறவுள்ளன.

இவை காலை 9.00 மணிக்கு தென்மராட்சி மேற்கு கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச சங்கத்திலும்,

காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகம், நகர சபை அலுவலகத்திலும் முற்பகல 11.00 மணிக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், பனை தென்னை வள அபிவிருத்தச் சங்க கொத்தணியிலும்,

நண்பகல் 12.00 மணிக்கு தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிலும் பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையிலும் நடைபெறவுள்ளன. (ப-47)

## சமுர்த்தி வங்கி அபிவிருத்திக்கு 50 கோடி ரூபா வழங்க இணக்கம்

### ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதி அறிவிப்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 35 சமுர்த்தி வங்கிகள் திறக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதற்கான தொழில் முயற்சிகளுக்குக் கடன் வழங்குவதற்காகவே இச் சமுர்த்தி வங்கிகள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

கடந்த யூன்மாத இறுதிவரை இந்த வங்கிகளில் ஆயிரத்து 195 கோடியே 60 லட்சம் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 202 கோடியே 10 இலட்சம் ரூபா சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கிகளை மேலும அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 50 கோடி ரூபாவை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் 161 கணனி இயந்திரங்களை வழங்கவும் முன்வந்துள்ளது என்று வங்கியின் இலங்கைப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (க)

## மருதங்கேணிப் பகுதியை நிர்வகிப்பதற்கென தனியான பிரதேசசபை அலுவலகம் வேண்டும்

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கருத்து

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கெனத் தனியார் பிரதேசசபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் அப்போது தான் இப் பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இவ்வாறு பருத்தித்துறைப் பிரதேச சபையின் உப அலுவலகம் ஒன்றை மருதங்கேணியில் திறந்து வைத்து பேசுகையில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இராசையா தொடர்ந்து கூறியதாவது,

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் உள்ள பருத்தித்துறைப் பிரதேச சபையின் உப அலுவலகம் வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன்பற்றில் இயங்கி வருகிறது.

இதனால் பிரதேசசபைககும உபஅலுவலகத்திற்கு மிடையான தூரம் நீண்டதாகவுள்ளதால் போக்கு வரத்து வசதி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை முன்னெடுப்பதற்கு பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே, வடமராட்சி கிழக்கிற்கென செம்பியன்பற்றை தலைமையாகக் கொண்ட தனியான பிரதேசசபையொன்றை உருவாக்க இப் பிரதேச சமூக அமைப்புக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வர வேண்டும் அப்போதுதான் இப் பிரதேசம் அபிவிருத்தியடைய முடியும் என்றார்.

அத்துடன், இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய பிரதேசசபை செயலர் சி.பசுபதி செம்பியன்பற்று உப அலுவலகம் வளர்ச்சி பெற இப்பகுதி மக்களின ஒத்துழைப்பு அவசியமாகும்.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு ஆளணி பற்றாக்குறைவாகவே இருந்துவருகிறது. இதனால் இவ் உபஅலுவலகத்தின் சேவையைத் திருப்திகரமாக வழங்க முடியாத நிலையுள்ளது. இது குறித்து உயர் மட்டங்களுக்கு அறிவித்துள்ளோம். போதிய ஆளணிகிடைத்தால் இவ் அலுவலகம் சீராக இயங்க வைக்கப்படும்.

கடநத காலப் போர் அனர்த்தங்களால் செம்பியன்பற்று உப அலுவலகம் தளபாடங்கள், புத்தகங்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் நூல் நிலையமும் இயங்க முடியாத நிலையிலுள்ளது.

இப்பகுதி மக்கள் தமது பாவனையிலுள்ள புத்தகங்களையும் அரசார்பற்ற நிறுவனங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் போதிய நிதி உதவிகளை வழங்கியும் நூலகத்தை மீள இயக்க ஒத்துழைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (ப-35)

புதிய கல்வி ஆண்டிற்கான
தரம் 10 , 11 – கணிதம்
32 வருடங்கள் நிலைத்து நின்று சேவைபுரியும்
வரதன் ஆசிரியரின் வகுப்புகள்
ஆரம்பமாகின்றன
The Express Institute
Irupalai, Kopay
-அதிபர்
(9047)

# நல்ல செயல்களில் ஈடுபடுவோரே இயேசுவை அறிந்து கொள்வர்

மனிதன் வாழ்விலே பல நற்காரியங்களைச் செய்யும் முன்னர் அதற்கான ஆயத்தங்களை, ஒத்திகைகளைச் செய்து



வரப்போகும் அல்லது நடக்கப்போகும் செயலை நல்முறையில் எதிர்கொள்ள வழிவகைகளைத் தேடிக் கொள்கின்றான். இவ்வாறேதான் ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதற்கும் பலவிதமான ஆயத்தங்களைச் செய்ய வேண்டியவனாக இருக்கின்றான். ஆனால் மனிதன் ஆன்மீகச் செயற்பாடுகளிலும் பார்க்க உலகியல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

## மெசியாவின் வருகை

மெசியாவின் வருகைக்காக திருமுழுக்கு யோவான் மக்களை ஆயத்தம் செய்தார். அன்று வாழ்ந்த மக்களை மனமாற்றத்தின் பாதைக்கு அழைத்தார். மெசியா பாவங்களில் இருநது மக்களை மீட்டு அவர்களுக்கு புது வாழ்வை அளிப்பார் என்று மக்களும் காலங்காலமாக எதிர்பார்த்திருந்தனர். இயேசுதான் அந்த மெசியா என்பதை பல மக்கள் அறந்து கொள்ளவில்லை. பலவிதமான அநீதிச்

## பரமபிதா காட்டிய பாதை

செயல்களிலும் குடிவெறி, களியாட்டங்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் வாழ்வை மாற்றி நல்வாழ்வின பாதைக்கு அழைக்கவே திருமுழுக்கு யோவான் போதனை செய்தார்.

## ஆன்மீக வாழ்வு

21 ஆம் நூற்றாண்டிலே விஞ்ஞான தொழில் நுட்ப யுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் ஆன்மீக காரியங்களில் அக்கறையற்றவர்களாக, சொத்து சுகங்களை, பொருள் பண்டங்களைச் சேர்ப்பதிலும் தேடி அலைவதிலும் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிடுகின்றார்கள். ஆன்மீகம் இன்றேல் ஆவதெல்லாம் வீணானதே. "ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக" என்று புனித பவுல் உரோமை மக்களுக்கு எழுதிய திருமடல் மூலம் குறிப்பிடுகின்றார். (உரோ 13:12) இதிலிருருந்து ஒழுக்கக் கேடான குடி வெறிபோன்ற தீய செயல்களில் ஈடுபடாமல் கண்ணியமானவர்களாக வாழும் போதே இயேசுக்கிறிஸ்துவை அணிந்து கொள்ள முடியும் என்றும் குறிப்பிடுகின்றார்.

## எப்பொழுதும் ஆயத்தமாக இருத்தல்

வாழ்வின் முடிவு என்பது எப்போது நிகழும் என்று ஒருவருக்கும் தெரியாத செயலாகும். பறப்பு எப்பொழுது நிகழும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மனிதன் மரணத்தின் முடிவை அறிந்து கொள்ள முடியாதவனாக இருக்கின்றான். மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயமான ஒன்று. அந்த மரணமே நாம் ஆண்டவனைச் சந்திக்கும் நாளாகும். எனவே அந்த நாளையோ நாளிகையையோ சந்திக்க எப்பொழுதும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்ற அறைகூவலே "விழிப்பாய் இருங்கள். ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என்பது உங்களுக்குத் தெரியாது" (மத்தேயு 24:42) மணமகனை எதிர்கொள்ளக் காத்திருந்த விவேகமுள்ள கன்னியர்களைப போல நாம் வாழ்ந்தால் இறுதி நாளின் வருகையை நாம் ஆவலுடன் எதிர்கொள்ளலாம்.

## அர்த்தமுள்ள ஆயத்தம்

திருவருகைக்காலம் கிறிஸ்து பிறபபுக்காலமாகத் திருச்சபை கொண்டாடுகின்றது. கிறிஸ்து பிறப்புக் காலத்தைத் தகுந்த முறையிலே ஆயத்தம செய்யும் முகமாகவே கிஸ்துவின காலத்தில் நடைபெற்ற சம்பவஙகளையே இறைவார்த்தை வாசகங்களாகத் தந்து எம்மையும் மனமாற்றத்திற்கு அழைத்து நிற்கினறது. இன்றைய நாட்களிலே நடக்கும் சம்பவங்கள் செயல்கள் எல்லாம் எம்மை மனமாற்றம் பெற வேண்டும் என்பதைக் கட்டியம கூறி நிற்கின்றது. காலத்தின் அறிகுறிகளையும் சேதிகளையும் அறிகின்ற ஒவ்வொருவரும் திரு வருகைக்காலத்திலே மனம் மாற்றமடைந்து அயலவர்களை ஏற்றுக்கொண்டு பகைவர்களை மன்னித்து அர்த்தமுள்ள விதத்திலே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நினைவு கூறும் கிறிஸ்மஸ் காலத்தைப் பயனுள்ள வகையிலே ஆயத்தப்படுத்தி இயேசுவின் வருகையை எதிர்கொள்ளத் தயாராவோம். □

அன்ரனி பீற்றர்

## மாதாந்த பொதுசன உதவிக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இந்த மாதத்திற்கான மாதாந்த பொதுசன உதவிப், புற்றுநோய், காசநோய் கொடுப்பனவுகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். (க)

## கார்த்திகை தீபமா? அல்லது பிரபாவின் பிறந்ததினமா?

(கொழும்பு)

கார்த்திகைத் தீபத் திருநாள் நிகழ்வுகளை தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளாகக் கருதிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட சம்பவம் இரத்தினபுரி உட்பட மலையகப் பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

திருக்கார்த்திகை தினமும் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினமும் இம்முறை ஒரே நாளில் அதாவது கடந்த மாதம் 26 ஆம திகதி அமையப்பெற்ற நிலையில் அன்றையதினம் மலையகப் பகுதிகளில் உள்ள கோயில்களில் விசேட பூசைகள் ஏற்பாடு செய்யப்பட்டு விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன.

இவற்றை தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டங்களாகக் கருதிய பொலிஸார் குறிப்பிட்ட கோயில் பூசகர்மாரை அழைத்துச் சென்று விசாரணை செய்துள்ளனர். (க-4)

## நிதி உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு கடற்றொழில் சங்கங்களின் சமாசத்திறகு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இரண்டு இலட்சத்து 10ஆயிரம் ரூபாவை கணனிக் கொள்வனவுக்காக ஒதுக்கியுள்ளார். (ப-35)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க ஜனவரி 31 வரை காலக்கெடு விதிப்பு !

## சட்டம் மற்றும் சமாதான அமைச்சு துரித நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான ஆயுதங்களைக் களைவது அத்தியாவசியமானது என்று சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் மேலதிகச் செயலாளர் தொடர்பான அமைச்சின் மேலதிகச் செயலாளர் எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது முதற்கட்டமாக வழங்கப்பட்ட சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிக்கும் பொதுமன்னிப்புக் கால கட்டத்தில் 1337 ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆயுதங்களை சட்டபூர்வமாக்கும் நடவடிக்கைகள் தற்போது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும் சுமார் 35 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் பாவனையில் இருப்பதாகச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் குண்டுகள் பொதுமன்னிப்புக்காலத்தில் ஒப்படைக்கப்படடுள்ளதாக அவர் கூறினார்.

சமூகம் மீது கோபம் உள்ளவர்களின் கையில் சட்டவிரோத ஆயுதங்கள் செல்வதன் காரணமாகவே குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதாக அமைசசு சுட்டிக்காட்டுகின்றது.

வடககு - கிழக்குப் பிரதேசங்களில் இருக்கும் சட்டவிரோத ஆயுதங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத ஆயுதம் தொடர்பாக திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் செயலாளர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செல்லத் தீர்மானித்துள்ளார். ஆயுதங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவோருக்கு 1000 முதல் 30 ஆயிரம் ரூபா வரையிலான சன்மானம் வழங்கப்படும்.

சடடவிரோத ஆயுதங்கள் வழங்கப்படும் பொது மன்னிப்புக் காலம் ஜனவரி 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ள தாகச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# அவுஸ்திரேலிய தூதுவராக பாலபட்டபெந்தி நியமனம்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இராஜதந்திர சேவைகளில் சில புதிய நியமனங்களை செய்யவிருப்பதையடுத்து சில புதிய தூதுவர்களின் பெயர்களை பொது மக்களின் பார்வைக்காக முன்வைத்துள்ளது.

அரசாங்கத் துறையிலும், அரச கூட்டுத்தாபனப் பதவிகள் தொடர்பாக ஆராயும் பாராளுமன்ற உயர் பதவிக்குழுவிலும் உத்தேசிக்கப்பட்டுள்ள 10 தூவர்களின் பெயர் விபரங்களை அறிவித்துள்ளது.

இதன்படி தற்போது இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவராகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இந்தோனேசியாவிற்கான தூதுவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கான புதிய தூதுவர் பதவிக்கு ஜனாதிபதியின் முன்னாள் செயலாளரான கே.பாலபட்டபெந்தியின் பெயர் பட்டியலில் இருக்கிறது.

இதேவேளை, தற்போது சுவிஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்குத் தூதுவராகப் பணியாற்றும் சீ.டி. காசிச்செட்டி மலேசியத் தூதுவராகவும், தேசிய வீடமைப்பு அதிகார சபைத் தலைவர் எம்.என். யுனைட் ஐக்கிய அரபு இராட்சியத் தூதுவராகவும், முன்னாள் தேர்தல் ஆணையாளர் சந்திரா டி சில்வா கனடாத்தூதுவராகவும், திருமதி சேனுகா செனவிரத்ன அமெரிக்கத் தூதுவராகவும், எல்.எம். பாருக் மாலைதவு தூதுவராகவும், கே.என்.பரன் கென்யாத் தூதுவராகவும், டபிள்யு.எஸ். இரத்தினவேல் சிக்கப்பூர்த் தூதுவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-4)

# உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்பட வேண்டும்

## அரியனேந்திரன் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படவேண்டு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் வீ.அரியனேந்தின் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொணடு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டிற்கு இன்று சமாதானம் அவசியம் தேவையாகவுள்ளது. இதற்காக சகல இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிறுகைத்தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அரியனேந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-8)

## "பாதாள உலக கோஷ்டியுடன் தொடர்பு"

# பொலிஸார் மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடாத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

உயர் பொலிஸ் அதிகாரிகள் பலருக்குப் பாதாள உலகக் கோஷ்டிகளுடன் தொடர்பு உள்ளதாக அண்மையில் வெளியாகியிருந்த குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து, தமது பதவிகளுககு பங்கம் விளைவிக்கும் இத்தகைய குற்றச்சாட்டுக்களைப் பூரணமாக விசாரிப்பதற்காக பாரபட்ச மற்ற விசாரணைகள் நடாததப்பட வேண்டுமெனப் பொலிஸ இனபெக்டர்கள் சங்கம் கேட்டுளளது.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ உட்படத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்படி குற்றச்சாட்டுக்களை ஊடகங்கள் சுமத்தியிருப்பதால், எமது பொலிஸ் திணைக்களத்திற்கு பெருத்த அவமானத்தைத் தேடித்தந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பொலிஸ் திணைக்களம் மீது மக்கள் நம்பிக்கையிழந்து விடுவார்கள். இவ்வாறு குற்றஞ்சாட்டுவது ஒரு நேர்மையான பொலிஸ் கான்ஸ்டபிளிற்குக் கூட அவமானத்தையே ஏற்படுத்தும் என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பொலிஸ் படையையும் நீதித்துறையையும் ஊழல் நிறைந்தது என குறிப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது - குறள்

வலம்புரி

# கதிர்காமர் அமைதி காப்பதே நல்லது!

மாவீரர் தினத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய உரைக்கு அரசு தரப்புப் பதில் திருப்தியாக இல்லை. இடைக்காலசபைத் திட்டவரைபின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்ற தலைவர் பிரபாவின் உரை தெளிவாக இருந்தபோதிலும், அதற்கான அரசதரப்புப் பதில் தெளிவற்றதாக - எதுபற்றிக் கூறப்படுகின்றது என்பதிலேயே முரண்பாட்டைக் கொண்டுள்ளது.

இதில் விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனையே பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் தடையாகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருப்பது வேடிக்கைக்குரியதாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்ற எட்டுமாதங்கள் முடிவடைந்தநிலையில் அமைச்சர் கதிர்காமர் புலிகளின் நிபந்தனை பற்றிக் கூறியிருப்பது அரசின் இயலாமையைக் காட்டிநிற்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் 2004 நவம்பர் 27 அன்றே மாவீரர் தின உரையை ஆற்றியிருந்தார். அந்த உரையில் இடைக்காலசபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிப்பதன் மூலமே தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்.

இன யுத்தத்தால் பேரழிவுகளைச் சந்தித்த தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்து, அவர்களின் வாழ்வியலில் ஓர் இயல்புநிலையை ஏற்படுத்துவது முதற்கட்ட அவசியம் என்பது தலைவர் பிரபாகரனின் கருத்து.

மேலும் புலிகளின் தலைவரால் கூறப்பட்ட விடயமானது ஏற்கனவே இறைமையுள்ள இலங்கை அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமும்கூட. நிலைமை இவ்வாறாக இருக்கும்பேது புலிகளின் நிபந்தனை காரணமாக பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாக அமைச்சர் கதிர்காமர் கூறியிருப்பது விசமத்தனமானது ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோதும் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. எனினும் அந்தப் பேச்சுவார்த்தை நீண்டுசெல்லவோ அன்றி அதன் மூலம் வெற்றியைப் பெற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

இதற்குக் காரணமாக இருந்தவர்கள் இருவர். அதில் ஒருவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்த, மற்றவர் லக்ஷ்மன் கதிர்காமர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் மிக மோசமான பிரசாரங்களை மேற்கொண்டார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரசாரம் செய்வதன் மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும், சிங்களவர்களினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பதே கதிர்காமரின் நோக்கம்.

ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவராக இருப்பதன்மூலம் பிரதமர் பதவி தனக்குக் கிடைக்கும் என கதிர்காமர் நம்பினார்.

பிரதமர் பதவியைப் பெற்றுவிடவேண்டும் என்பதற்காக தமிழர்களுக்கு எதிராகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொண்டார். இலங்கை இனவாத அரசின் கபடத்தனத்தைப் புரிந்துகொள்ளாத சர்வதேச நாடுகள் சில கதிர்காமரின் பிரசாரத்தை நம்பி விடுதலைப் புலிகளை தமது நாட்டில் தடைசெய்தன.

ஆனால் இன்று உண்மையைப் புரிந்துகொண்ட அந்த நாடுகள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டால் மட்டுமே அரசுக்கு நிதியுதவி செய்யமுடியும் எனக் கூறிவருகின்றன.

இப்போதும் அதே கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருக்கின்றார். ஆனால் வெளிநாடுகளில் அவரின் பருப்பு வேகமுடியாதவகையில் தறுக்கணித்துப் போயுள்ளது.

அதேவேளை, பிரதமர் பதவி தனக்குக் கிடைக்கும் என நம்பியிருந்தவருக்கு சிங்களவர் சிங்களவர் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் ஜனாதிபதி கதிர்காமரை ஊச்சிகாட்டியுள்ளார்.

இவை ஒருபுறம் இருக்க சமாதானப் பேச்சுகளில் யார்தான் பங்குபற்றினாலும், அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பங்குபற்றக்கூடாது என விடுதலைப் புலிகள் நிறுதிட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

ஆக, இன்று எல்லா வகையிலும் பல்லுப் பிடுங்கப்பட்ட கதிர்காமர் பேசாமல் மௌனம் காப்பதே அவருக்கும் நல்லது. நாட்டிற்கும் நல்லது.

# நிரந்தர சமாதானத்திற்காக தனது உயிரையும் துறப்பாராம் ஜனாதிபதி

(கொழும்பு)

**நாட்டில் 80 சதவீதமான மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள். சொற்ப தொகையினரே அதற்கு எதிராக உள்ளார் கள். இருப்பினும் யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சரி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே தனது இலக்கு என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.**

**நேற்று முன்தினம் மாலை மொனறாகலையில் நடை பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர்,**

ஒரே இரவில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. படிப்படியாகவே சமாதானத்தை உருவாக்க வேண்டும்.

எத்தகைய நெருக்கடி நிலை அல்லது தடைகள் வந்தாலும் அதற்கு முகம் கொடுத்து நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படும். விடுதலைப் புலிகளுடன் பேச அரசாங்கம் தயாராகவிருக்கின்றது. தற்போது அமுலிலுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை என்பது யுத்த நிறுத்தமே தவிர போா முடிந்து விட்டது என்பது அல்ல. சில சந்தாப்பங்களில் அந்த உடன்படிக்கை கூட ஒரு தரப்பினரால் மீறப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த மக்கள் உட்பட தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவதே இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும். இதற்கு பேச்சுவாாத்தை தான் பொருத்தமான வழி.

தமிழீழ விடுதலைப் புலி களினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால நிாவாக யோசனை தொடாபாக பேச அரசாங்கம் தயார். ஆனால் அது மட்டுமல்ல இறுதித்தீர்வு தொடாபாகவும் பேச வேண்டும். அப்போது தான் நிரந்தர தீர்வை எட்ட முடியும்.



சமாதானத்தை அடைவது தொடர்பாக மக்களுக்கு அளித்த வாக்குறுதி நிறை வேற்றபபட்டு மக்களுக்கு மதிப்பளிக்கப்படும்.

இதற்காகவே கடந்த 10 வருடங்களாக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இரு பிரதான தேசிய கட்சிகளும் இணைந்து செயற்பட்டிருந்தால் விடுதலைப் புலிகள் எம்மீது குற்றம் சுமத்த வேண்டிய அவசியம் வந்திராது. இதற்கு காரணம் ஐ.தே.க. இணைந்து செயற்பட முன்வருவதில்லை. அக்கட்சி விடுதலைப் புலிகளுடன் இணைந்து மீண்டும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்படுகின்றது என்றார். (க-4)

# மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை குறைக்க மேல் மாகாணசபை முயற்சி

(கொழும்பு)

மாகாண சபை உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் நிதியைக் குறைப்பதற்கு மேல் மாகாண சபை முயற்சி செய்வதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் 30 லட்சம் ரூபாவை 20 லட்சம் ரூபாவாகக் குறைப்பதற்கு மேல் மாகாண சபை நடவடிக்கை எடுத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினரான சுஜீவ சேனசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்போது நாணய பொறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக, 20 லட்சம் ரூபாவை கொண்டு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களுக்கு மேலும் 50 வீதம் செலவிட வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இதனால் மாகாண சபை உறுப்பினர்கள் உரியமுறை யில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச செல்ல முடியாத நிலையில் உள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (கூ-61)

# ஐ.தே.க. முன்பு சமர்ப்பித்த திட்டங்களே தற்போதைய பட்ஜெட்டின் உள்ளடக்கமாம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தின் இந்த வரவு -செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. முன்னர் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட இத் திட்டங்கள் கூட்டமைப்பினால் நிராகரிக்கப்பட்டன. இந்நிலையில் இம்முறை வரவு -செலவுத்திட்டத்தில் கூட்டமைப்பு அரசினால் இத்திட்டங்கள் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து கூட்டமைப்பு வெட்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை சிங்களம் மட்டும் என்ற சட்டம் கடந்த 1956 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் முன்வைக்கப்பட்டதன் காரணமாகவே நாட்டில் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராசா அவ் விவாதத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலத்துடன் தமிழ் மொழியையும் கற்பதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார்.

இவ் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவிக்கையில்,

மலையகத்தில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள என. மலையகப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை பாரிய பிரச்சினையாக உள்ளது எனக் கூறினார். (ந-8)

# புலிகளுக்கும் மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளனவாம்

## நேபாள அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களின் சுதந்திரத்துக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும நேபாளத்தில் முடிக்குரிய அரசுக கெதிராகப் போராடும் மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுளள நேபாளத்தின் சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி முஹமட் மேலாவின் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் தமது நாட்டின் மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் ஆயுதரீதியாக வேறுபாடுகள் இருக்கலாம் ஆட்பலம் வேறுபாடாக இருக்கலாம.

ஆனால் இரு அமைப்புக்களுக்கும இடையில் தொடாபு இருப்பதாகவே தமது அரசாங்கம் கருதுகின்றது எனத் தெரிவித்தார். (க-4)

## திசைரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**நம்மிடம் உள்ள சக்தி எல்லைக்கு உட்பட்டது. நீங்கள் அதை ஓர் இடத்தில் பயன்படுத்தலாம். இன்னோர் இடத்தில் இழக்கலாம் ஆனால் மொத்தச் சக்தி என்னவோ எப்போதும் ஒன்றுதான். ஓர் இடத்தில் அலை எழுந்தால் இன்னோர் இடத்தில் பள்ளம் விழுகிறது ஒரு நாடு பணத்தில் செழித்தால் மற்ற நாடுகள் வறுமையில் வடுகின்றன. தீமையை நன்மை சமன் செய்கிறது.**

சுவாமி விவேகானந்தர்

# தமிழ் எம்.பிக்கள் உணர்ச்சிவசப்பட்டு பாராளுமன்றில் உரையாற்றுகின்றனர்

## அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டி.யு.குணசேகர

(கொழும்பிலிருந்து சதீபன்)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப் படவேண்டுமாயின் வடக்குக் கிழக்கு அபி விருத்தித் திட்டங்களின் அமுலாக்கல், அதிகாரமுள்ள ஓரிடத்தில் குவிந்திருக்கக் கூடாது. அது பகுதிபகுதியாகப் பிரிக்கப் பட்டு செயற்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள் ளார். இலங்கையின் இனப்பிரச்சினைக் கான தீர்வை மேம்படுத்தும் அதிகாரத் தைப் பகிர்ந்துகொள்ளும் சமஷ்டிமுறை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நேற்று கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ கம நல ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற் றது.

இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை அரசியலில் செயற் படுத்த முனைகிறார்கள். அதேவேளை நிதானமாக உரைகளை நிகழ்த்தாமல் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பாராளு மன்றத்தில் உரைநிகழ்த்துகின்றனர். இவ் வாறான செயற்பாடுகள் கருத்து மோதல் களையே ஏற்படுத்தும்.

இப்படி உரை நிகழ்த்தவேண்டாமென வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும், நானும் அவர்களுக்குக் கூறியிருக்கிறோம்.

1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டுவரை தமிழ்மொழியை அரச கரும மொழியாக்க பெரும்பாடுபட்டேன். தற்போதும் போராடிவருகின்றேன். வடக் குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ்மக்கள் 82 சதவீதமாக உள்ளார்கள்.

வடக்குக் கிழக்கிற்கு வெளியே பெரும் பாலான தமிழ்மக்கள் வசிக்கின்றனர். அரச திணைக்களங்களிற்கு அவர்கள் செல்லும் போது சிங்கள மொழிபெயர்ப்பாளர் ஒரு வரைத் தேடிச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது. வடக்குக் கிழக்கில் தமிழ் தெரிந்த பொலிஸாரை பணிக்கு அமர்த் தும்படி நான் அனைவருக்கும் வேண்டு கோள் விடுத்துவருகின்றேன். யுத்தத்தை நாம் ஒருபோதும் விரும்பவில்லை என்றார்.

இந்நிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், விஞ் ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண, மலையக மக்கள் முன்னணி யின் பிரதித் தலைவர் லோறன்ஸ், ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தன, ஈ.பி.டி.பி சார்பில் விக்னேஸ்வரன் மற்றும் முஸ்லிம் காங்கி ரஸ் கட்சி உறுப்பினர்கள் அங்கு உரை நிகழ்த்தினர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சமாதானம் தொடர்பான பாடல்களை பாடிவரும் ஜய திலக் பண்டார 'உலகத் தாய் வயிற்று மைந்தர் நசிந்து இனிக் கிடக்கமாட்டோம். நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்' என்ற பாடலை மும்மொழிகளிலும் பாடினார்.

அரசியல்கட்சி பிரமுகர்களின் உரை யைத் தொடர்ந்து சமஷ்டிமுறை தொடர் பான ஐரோப்பிய நாடுகளின் அனுபவங்கள் என்ற தலைப்பில் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த பேணாட் கொலாத் உரை நிகழ் தினார்.

யாழ். பல்கலைக்கழக பட்டபின்படிப்பு கள் பீடாதிபதி பேராசிரியர் சிற்றம்பலம், தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரை யாளர் செல்வி எஸ்.அனுஷியா, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, சரோஜா சிவச்சந்திரன், அரச சார்பற்ற நிறுவனங் களின் இணையம் சார்பில் எஸ்.பரமநாதன் ஆகியோர் உட்பட கலைஞர்கள் பத்திரி கையாளர்கள், · எழுத்தாளர்களெனப் பெரு மளவானோர் நிகழ்வில் கலந்துகொண் டனர். (த)

### பரிசளிப்பு விழா

(புங்குடுதீவு)

கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் 40 ஆவது நினைவுதின வைபவம் இன்று மு.ப 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண் டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி தலை மையில் நடை பெறவுள்ளது.

அத்துடன் கூட்டுறவுதின விழா நிகழ் வில் பரிசுபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக் கும், தேசிய மட்டத்தில் பரிசுபெற்றவர் களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்வைபவத்தில் நினைவுப் பேருரை யினை யாழ். பல்கலைக்கழக வணிகத் துறை தசமூக அபிவிருத்தி கூட்டுறவுக் கல்வி, சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரத்தினம் நிகழ்த்தவுள்ளார். (க-126)

✠✠✠

(துன்னாலை)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியா லய பரிசளிப்புவிழா இன்று மு.ப 9 மணிக்கு பாடசாலை அதிபர் இ.இராகவன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தின ராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் வே.தி.செல்வரட்ணமும் அவரது பாரி யாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-101)

### ஆண்டு விழா

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தின் ஆண்டு விழா இன்று பி.ப. 5 மணிக்கு சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் அ.இம் மானுவேல் தலைமையில் நடைபெறவுள் ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வண.பிதா அன்ரனிப்பிள்ளை கலந்து சிறப் பிப்பார்.

சங்கத்தின் 46 வது ஆண்டு விழாவை யொட்டி நடாத்தப்பட்ட மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், நீளம் பாய்தல். குண் டெறிதல், தட்டெறிதல் மற்றும் கட்டுரை, கவிதை, விவாதம், நாடகம் போன்ற போட்டி களில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக் கான பரிசில்களும் இன்றைய நிகழ்வில் வழங்கப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தால் பயிற்று விக்கப்பட்ட "பெண்ணியம் பேசுகின்றது' என்ற நாடகமும் மேடையேறக் காத்திருக் கின் றது. (க-58)

✠✠✠

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 84 வது ஆண்டு நிறைவு விழா இருநாள் நிகழ்வுகளாக நடைபெற்றுவரு கின்றன.

தலைவர்கோ.சிவசுந்தரமூர்த்தி தலை மையில் முதலாவது நாள் நிகழ்வுகள் கொடியேற்றலுடன் ஆரம்பமாகின.

இரண்டாவது நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியள வில் தொடர் நிகழ்வுகளாக நடைபெறவுள் ளன. (க-74)







## வழிதவறிச் சென்றது...

வந்துள்ளது.

இதனிடையே குறித்த இளை ஞர்கள் பயணித்த வான் உயர் பாதுகாப்பு வலயமான கொழும்பு துறைமுகப்பகுதிக்குள் வழிதவ றிப் புகுந்ததாகவும் இதனை அடுத்து இவர்கள் அனைவரும் கடற்படையினரால் கைது செய் யப்பட்டு பொலிஸார் ஊடாக கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்டவேளை இவர்களை தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து இவர்கள் வெலிகடைச் சிறைச்சாலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கொழும்பு பொலிஸார் பருத்தித்துறை முனைப்பகுதி இராணுவ முகா முக்கு அனுப்பியுள்ளனர்.

காணாமல்போன இளைஞர்க ளின் பெற்றோர் மீனவ சங்க சமாஜமூடாக போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிற்கும் உரிய தரப்பினர்களுக்கும் அறிவித்துள் ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (த)

### அதிகாரப்...

நிர்வாக யோசனை தொடர்பாக பேச அரசாங்கம் தயார். ஆனால் அது மட்டுமல்ல. இறுதித் தீர்வு தொடர்பாகவும் பேசவேண்டும். அப்போதுதான் நிரந்தர தீர்வை எட்டமுடியும்.

சமாதானத்தை அடைவது தொடர்பாக மக்களுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு மதிப்பளிக்கப்படும். இதற்காகவே கடந்த 10 வருடங் களாக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தேசியப் பிரச்சினையில் இணைந்து செயற்படுமானால் விடுதலைப் புலிகளால் பூச்சாண்டி காட்ட முடியாது. அவர்கள் எம்மை குற் றம் சுமத்தவேண்டிய அவசியமும் ஏற்படாது.

ஆனால், எம்முடன் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை. பதிலாக விடுத லைப் புலிகளுடன் இணைந்து மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற குறிக்கோளுடனேயே ஐக் கிய தேசியக் கட்சி செயற்படு கின்றது என்றும் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க மேலும் தெரி வித்துள்ளார். (இ)

### அவுஸ்ரேலியா...

கள் நடைபெற்றன.

தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரை அகலத்திரை யில் காண்பிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பரப்புரை பொறுப்பாளர் சபேசன் தலைவ ரின் உரையின் முக்கியத்துவம் குறித்தும், தற்கால அரசியல் நிலை குறித்தும் உரையாற்றிய துடன், தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய **War and Peace** என்ற நூலையும் ஆய்வு செய்தார். அத னைத் தொடர்ந்து இந்நூல் வெளியீடு நடைபெற்றது.

தமிழக ஓவியர் புகழேந்தி அவர்களின் சிறப்புரையும், சிட்னி இளைஞர்களின் நாடகமும், மெல் பேர்ன் இளைஞர்களின் நாடக மும், நாட்டிய பாடல் நிகழ்ச்சிக ளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் மண்டபம் நிறை யும் அளவிற்கு ஆயிரக்கணக் கில் மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

### விருது வழங்கல்

யாழ்ப்பாணம் வர்த்தக வங் கியில் அருணலு திட்டத்தின் கீழ் தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் சித்தியெய்திய மாண வர்களுக்கு இன்று முற்பகல் 10.30 மணிக்கு விருதுவழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (இ)

### பாதுகாப்பு...

வின் பல்வேறு சமூகங்கள் ஆகி யவற்றிடமிருந்தும் ஆதரவைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை தென்னிந்தியத் திரைப்படத் துறையினரிடமும் இதுகுறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கோரவேண்டும். தென் னிந்தியத் திரைப்படங்களுக்கு வெளிநாடுகளிலுள்ள ஈழத் தமி ழர்களால் பலகோடி ரூபா பணம் பெரும் லாபமாகக் கிடைக்கிறது. அவர்களது ஊதியத்துக்கு ஈழத் தமிழர்களது பங்கு மிகப்பெரி யது. ஆகவே ஈழத் தமிழர்க ளுக்கு எதிரான ஒரு இன அழிப்பு நடவடிக்கைக்கான உதவியை இந்திய அரசு மேற்கொள்ள அவர் கள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

பாகிஸ்தான் படையினரால் கொல்லப்பட்ட தமது நாட்டுப் படையினருக்கு உதவிசெய்ய கலை நிகழ்ச்சி நடத்தி நிதி சேகரித்துக்கொடுத்த தென்னிந்தி யத் திரையுலகம் தமது அரசின் நடவடிக்கையால் தொப்புள்கொடி உறவான ஈழத் தமிழர்கள் பாதிக் கப்படும் இந்த இக்கட்டான சூழ் நிலையிலும் தமது நியாயமான கரிசனையைக் காண்பிக்கவேண் டும். நேரடியாக அல்லது தமிழ் நாடு அரசின் ஊடாக மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

உடன் தேவை

❖ அலுவலகச் செய்தியாளர்கள் - ஆண்கள் (இரவுக் கடமை)
❖ விளம்பர சேகரிப்பாளர்கள் (இருபாலாரும்)

06-12-2004 பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்

குறிப்பு:-
யாழ்.நகரமையத்திலிருந்து 8.கி.மீ.தூரத்திற்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவர்கள் மட்டும்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி-சங்குநாதம்.

திங்கள் முதல் உங்கள் வலம்புரியில்
மீள்பார்வை
புதியகளம்,
அரசியல், அறிவியல், சமூகவியல், வரலாறுகளை
அறிந்துகொள்ள அரியதோர் சந்தர்ப்பம்
மீள்பார்வையில் அடுத்து
வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்
எழுதிய
யாழ்ப்பாணத் தமிழரசர்
வரலாறும் காலமும்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.